Registered as a news paper.

பக்கங்கள்:

பொதுசன நூலகம்

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 வைகாசி 14 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ர.அவ்வல் 24 (28.05.2003) புதன்கிழமை இதழ் : 236

**Internet Browsing @**
**Secote information Technologies**
(near the parameswara junction)
யாழ். நகரில்...
குறைந்த கட்டணத்தில் அனைத்து கணனிசார் வேலைகளையும் பெற்றுக்கொள்ள சிறந்த இடம்,
- அதிவேக PENTIUM 4 கணனி மூலம்
- இணை சேவை (Internet Browsing)
- இன்ரநெற் போன் நிமிடத்துக்கு 10/- (கனடா, அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள்)
- Computer printing 1Page 10/-
- Cd Writing 50/- (Computer Type seting)
- Floppy disc, CD என்பன பெற்றுக்கொள்ளலாம்.
- Computer Type Setting

(354)

### புலிகள் கேட்கும் இடைக்கால நிர்வாகம்

## அரசு சாதகமான பதில் வழங்க நோர்வே பிரதமர் கோரிக்கை!



இடைக்கால நிர்வாகம் அமைக்கவேண்டுமென, தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்துள்ள கோரிக்கைக்கு, இலங்கை அரசாங்கம் இணக்கப்பாட்டுடன் கூடிய பதிலொன்றை வழங்கவேண்டுமென, நோர்வேப் பிரதமர் பொண்டவிக் தெரிவித்துள்ளார்.

புலிகளின் இந்தப் பிரேரணையை ஜனாதிபதி நிராகரித்துள்ளதாக அறிக்கை வெளியிட்டது குறித்து தனக்குத் தகவல் கிடைத்துள்ளபோதிலும், பேச்சுவார்த்தையை முன்னின்று நடத்தும் அரசாங்கம் - உரிய, நெகிழ்வான நடவடிக்கைகள் எடுக்குமெனத் தான் நம்புவதாகவும், தற்காலிகமான இத்தகைய ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கு - இலங்கை அரசுக்கு எந்தவிதமான பிரச்சினைகளும் இருக்குமெனத் தாம் எதிர்பார்க்கவில்லை எனவும் நோர்வேப் பிரதமர் கூறியுள்ளார். நோர்வேப் பிரதமர், தற்போது ஜப்பானில் உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (01)

## இந்திய ராணுவ அதிகாரிகள் நேற்று திடீர் யாழ். விஜயம்!

### படைத் தளபதிகளுடன் கலந்துரையாடினர்

(யாழ்ப்பாணம்)

இந்திய இராணுவ அதிகாரிகள் குழு ஒன்று, நேற்று யாழ்ப்பாணத்துக்கு திடீர் விஜயம் செய்துள்ளது.

நேற்றுக்காலை, பலாலி விமான நிலையத்தை வந்தடைந்த மேற்படி அதிகாரிகள் குழுவினர், அங்குள்ள யாழ்.மாவட்ட இராணுவத் தளபதியின் அலுவலகத்தில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலில் பங்குபற்றினர்.

இக்கலந்துரையாடலில் - யாழ். இராணுவத் தளபதி, யாழ். கடற்படைத் தளபதி ஆகியோருடன் மேலும் பல இராணுவ அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலைத் தொடர்ந்து, மேற்படி அதிகாரிகள் யாழ்.நகருக்கும் விஜயம் செய்தனர். யாழ்.நகரின் பல பகுதிகளுக்கும் சென்று பார்வையிட்ட பின்னர், 512 ஆவது பிரிகேட் அலுவலகத்தில் கலந்துரையாடல் ஒன்றிலும் இவர்கள் பங்கேற்றனர்.

மேற்படி, இந்திய இராணுவ அதிகாரிகளின் யாழ்.விஜயம் குறித்துக் கருத்து வெளியிட, யாழ்.படைத்தரப்பு மறுப்புத் தெரிவித்துவிட்டது.

# அரசு அனுப்பிவைத்த யோசனை விடுதலைப் புலிகளால் ஆராய்வு!

### ஓரிரு தினங்களில் முடிவு அறிவிக்கப்படும்

(நமது நிருபர்)

விடுதலைப் புலிகள் முன்வைத்திருக்கின்ற இடைக்கால நிர்வாகக் கோரிக்கைக்கான அரசாங்கத்தின் பதிலும் - அரசு பிரேரித்திருக்கும் புதிய யோசனையும் - விடுதலைப் புலிகளுக்குக் கிடைத்திருப்பதாகத் தெரியவருகின்றது. நேற்றைய தினம் அனுப்பி வைக்கப்பட்டிருந்த அரசின் புதிய யோசனை, விடுதலைப் புலிகளால் ஆராயப்பட்டு வருவதாகவும், இதற்கான பதில் விரைவில் வெளிவரலாமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

விடுதலைப் புலிகள் கோரிநிற்கும் அரசியலமைப்புக்கு வெளியிலான, இடைக்கால நிர்வாக அமைப்பு என்பதற்குப் பதிலாக, வட - கிழக்குப் பகுதிகளில் மேற்கொள்ளப்படவிருக்கின்ற அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளின்போது, நிதி விவகாரங்களைக் கையாளக்கூடிய - அரசியலமைப்புக்குள்ளான அமைப்புப் பற்றியே - அரசாங்கம் தனது யோசனையில் பிரேரித்திருப்பதாகத் தெரியவருகின்றது.

## சொல்ஹெய்ம் வன்னி விஜயம் இறுதி நேரத்தில் ஒத்திவைப்பு!

### அரசின் பதிலை ஆராய்ந்த பின்பே அழைப்பு

(கொழும்பு)

இடைக்கால நிர்வாகம் தொடர்பான விடுதலைப் புலிகளின் கோரிக்கைக்கு, அரசின் பதிலை எடுத்துக்கொண்டு நோர்வே விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், நேற்று கிளிநொச்சி வரவிருந்தபோதிலும் இறுதி நேரத்தில் அவரின் விஜயம் ஒத்திவைக்கப்பட்டது.

மின்னஞ்சல் மூலம் விடுதலைப் புலிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள அரசின் யோசனையை, விடுதலைப் புலிகள் ஆராய்ந்து முடிவெடுக்க காலம் தேவை என்பதால், தாம் இந்த யோசனை குறித்து முடிவு எடுக்கும்வரை விஜயத்தை ஒத்திப்போடுமாறு (10 ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்கத் தூதரக அதிகாரிகள்

# ரோக்கியோவுக்கு புலிகளா? எதிர்த்து பிக்குகள் பேரணி!




ரோக்கியோவில் நடைபெறவுள்ள நிதியுதவி மாநாட்டில், விடுதலைப் புலிகள் பங்குபற்றக்கூடாது என வலியுறுத்தி - நேற்று பௌத்த பிக்குகள் பெரும் ஊர்வலம் ஒன்றைக் கொழும்பில் நடத்தியுள்ளனர். 'தேசத்தைப் பாதுகாப்புதற்கான தேசிய பிக்குகள் முன்னணி' என்ற அமைப்பு, இந்த எதிர்ப்பு ஊர்வலத்தை ஏற்பாடு செய்திருந்தது. நூற்றுக்கணக்கான பிக்குகள் இப்பேரணியில் பங்கேற்றனர்.

இப்பேரணி - கொழும்பிலுள்ள ஜப்பானியத் தூதரகத்தைச் சென்றடைந்ததும், புலிகளை ரோக்கியோ (10 ஆம் பக்கம் பார்க்க)

# அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் இன்று காலை யாழ். வருகின்றனர்

இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகத்தின் - அரசியல் விவகாரங்களுக்கான உயரதிகாரிகள் குழுவொன்று, இன்று யாழ்ப்பாணம் விஜயம் செய்யவுள்ளது.

யாழ். அரச அதிபர் உட்பட, உயர் அரச அதிகாரிகள் பலரை இக்குழுவினர் இன்று சந்திக்கவுள்ளனர்.

இலங்கையில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தின் அரசியல் விவகாரங்களுக்கான அதிகாரி கிறிஸ் லோங் மற்றும் அரசியல் ஆய்வு உத்தியோகத்தர் பத்மினி ராஜதுரை ஆகியோர் மேற்படி குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

இக்குழுவினர், யாழ்.மாவட்டத்திலுள்ள பல்வேறு பகுதிகளுக்கும் விஜயம் செய்யவுள்ளனர். யாழ்ப்பாணத்தில் மிதிவெடி அகற்றப்பட்டு வரும் பகுதிகளுக்கும், இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருக்கும் சில நலன்புரி நிலையங்களுக்கும் மேற்படி குழுவினர் சென்று பார்வையிடவுள்ளனர்.

## விண்ணாணம் விநாசியர்



அட்டகாசமான அரசியல்வாதி அம்மையார்தான்...!

# புலிகளுடன் மனம்விட்டுப் பேச ஜனாதிபதி விரும்புகிறாராம்!

## அமைச்சர் மகேஸ்வரனிடம் தெரிவிப்பு

இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சர் தி.மகேஸ்வரன், நேற்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை அவரது வாசஸ்தலத்தில் சந்தித்துப் பேசியுள்ளார்.

இப்பேச்சுக்களின்போது - இடைக்கால நிர்வாகசபை தொடர்பாக தம்முடன் அரசோ, புலிகளோ கலந்தாலோசிக்கவில்லையென ஜனாதிபதி கூறியதாகவும் - ஜே.வி.பியுடன் கூட்டுச்சேர்வதால், தனது தமிழர் தொடர்பான பார்வையில் மாற்றம் ஏதும் ஏற்படாதென ஜனாதிபதி கருத்துத் தெரிவித்ததாகவும் அமைச்சர் மகேஸ்வரன் (10 ஆம் பக்கம் பார்க்க)

**EXPO Aviation**
**எக்ஸ்போ**

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 071 349999
071 348888 074 ~ 512666 ~ 01 ~ 360290

(சி -913)

# யாழ். உள்ளூராட்சி மன்றங்களில் பதவி வெற்றிடங்கள் நிரப்பவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி அமைப்புக்களில் - நூற்றுக்கு மேற்பட்ட பதவிகள் நிரப்பப்படாமல் வெற்றிடமாக இருப்பதாகத் தெரியவருகிறது.

10 வகையான உத்தியோகத்தர்கள் பதவிகளே நிரப்பப்படாது இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நிர்வாக சேவை உத்தியோகத்தர்கள் 14 பேரும், எழுதுவினைஞர்கள் 28 பேரும், நூலகர்கள் 24 பேரும், தொழில்நுட்ப உதவியாளர்கள் 12 பேரும், வருமானப் பரிசோதகர்கள் 7 பேரும், பொதுச்சுகாதார பரிசோதகர்கள் 10 பேரும், உதவி மருத்துவப் பரிசோதகர்கள் இருவரும், களஞ்சியக் காப்பாளர்கள் இருவரும், காசாளர் ஒருவரும், தட்டெழுத்தாளர் ஒருவரும் நியமிக்கப்பட வேண்டியுள்ளனர்.

வெற்றிடங்களாகவுள்ள இப்பதவிகளுக்கு எவரும் நியமிக்கப்படாததால், யாழ். குடாநாட்டிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் பணிகள் பாதிக்கப்படுவதாகத் தெரியவருகிறது.



அனுராதபுரம் கதிரேசன் ஆலயத்துக்கு இந்துகலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் அண்மையில் விஜயம் செய்தபோது எடுக்கப்பட்ட படம். இவ்வாலயத்தில் 17 வருடங்களின் பின் - இன்று 10 நாள் அலங்கார உற்சவம் ஆரம்பமாகிறது.

## பத்தைமேனி பாடசாலையை மீளத் திறக்கக் கோரிக்கை

அச்சுவேலி - பத்தைமேனியில் பல வருடங்களாக மூடிக்கிடக்கும் பாடசாலையை மாணவர்களின் நலன் கருதி மீண்டும் ஆரம்பிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

1995 ஆம் ஆண்டு இடம்பெற்ற இராணுவ நடவடிக்கை காரணமாக மூடப்பட்ட இப்பாடசாலை, மக்கள் குடியமர்ந்து பல வருடங்களாகியும் மீண்டும் திறக்கப்படவில்லை. இப்பாடசாலையில் கல்வி கற்றுவந்த மாணவர்கள் அருகாமையிலுள்ள பாடசாலைகளில் கல்வி கற்றுவருகின்றார்கள்.

பாடசாலையில் கட்டடங்கள் சேதமடையாத போதிலும், அங்கு தளபாட வசதிகள் எதுவும் இல்லாத நிலையே காணப்படுகிறது.

மாணவர்களின் நலன்கருதி, பாடசாலையை மீண்டும் இயங்க வைக்கவேண்டும் என்று, அப்பகுதி மக்கள் கேட்டுள்ளனர்.

## சமய அறிவுப் போட்டி

(சிறுப்பிட்டி)

இணுவில் கந்தசுவாமி கோவில் மகோற்சவத்தை முன்னிட்டு இணுவில் இளந்தொண்டர் சபையும், இந்துசமய வளர்ச்சிக்கழகமும் இணைந்து பாடசாலை மாணவர்களிடையே சைவசமய அறிவுப்போட்டிகளை நடத்தவுள்ளது.

மேற்படி போட்டியில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள், எதிர்வரும் 9 ஆம் திகதிக்கு முன்னர் அதிபரின் சிபார்சுடன், விண்ணப்பங்களை - இணுவில் கந்தசுவாமி கோவில் இளந்தொண்டர் சபைக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (78)

## கிளிநொச்சி மாவட்டத்தில் 40 குளங்கள் புனரமைப்பு

மூன்றாண்டு திட்ட அடிப்படையில், கிளிநொச்சி மாவட்டத்தில் 'நியாப்' திட்டத்தின் கீழ் - 40 நீர்ப்பாசனக் குளங்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

2001 ஆம் ஆண்டு முதல் 2003 ஆம் ஆண்டு வரையான காலத்திற்குள் இவை புனரமைப்புச் செய்யப்படவேண்டியவை என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்படி திட்டத்தில், கிளிநொச்சி - கரைச்சிப் பிரதேசசெயலர் பிரிவில் 16 குளங்களும், பளைப் பிரதேசசெயலர் பிரிவில் 4 குளங்களும், கண்டாவளைப் பிரதேசசெயலர் பிரிவில் 7 குளங்களும், பூநகரிப் பிரதேச செயலர் பிரிவில் 13 குளங்களும் புனரமைக்கப்பட்டுவருகின்றன. (122)

## சமாதான விளையாட்டு விழா; ஏற்பாட்டுக்கு அமைச்சர் வருவார்!

வடக்கு - கிழக்கு சமாதான விளையாட்டு விழாவினை யாழ்ப்பாணத்தில் நடாத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு, காணியமைச்சர் ராஜித சேனாரத்ன யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

வடக்கு - கிழக்கிற்கான சமாதான விளையாட்டு விழாவினை - செப்டெம்பர் 4 ஆம் திகதி முதல், 7 ஆம் திகதிவரை யாழ்ப்பாணத்தில் நடாத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கான முன்னோடிக் கலந்துரையாடலொன்று, ஜூன் மாதம் 2 ஆம் திகதி யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக்கலந்துரையாடலில் - காணியமைச்சர் ராஜித சேனாரத்ன உட்பட நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சட்டவிரோதமாக மின்பெற்றோர் பிடிப்பட்டனர்.

கம்பர்மலை, இமையாணன், பொலிகண்டி ஆகிய இடங்களில் திருட்டுத்தனமாக மின்சாரம் பெற்று வந்தவர்களை, வல்வெட்டித்துறைப் பொலிஸார் பிடித்தனர்.

கடந்த புதன்கிழமை இரவு 7 மணிதொடக்கம் 9.15 மணிவரை மேற்கொண்ட இந்நடவடிக்கையில், 14 பேர் பிடிக்கப்பட்டு வல்வெட்டித் துறைப் பொலிஸ்நிலையத்தில் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர். (107)

## இளைஞர் மன்றப் பணிகள் ஸ்தம்பிதமடையும் அபாயம்

(யாழ்ப்பாணம்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ்.மாவட்ட அலுவலகத்தில் கடமையாற்றும் 4 பேர் - சுயவிருப்பத்தின் பேரில் ஓய்வுபெறவிருப்பதையடுத்து, மேற்படி அலுவலகப் பணிகள் ஸ்தம்பிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

ஏற்கனவே பற்றாக்குறையான ஆளணி மற்றும் வளங்களுடன் இந்த அலுவலகம் இயங்கி வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, உதவி இளைஞர் சேவை உத்தியோகத்தர் பதவிக்கான நேர்முகத்தேர்வு இடம்பெற்று நீண்ட நாட்கள் ஆகியும், எவருக்கும் நியமனம் வழங்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (43)

## முதியோர் பற்றிய ஆய்வு வலிகாமத்தில் ஆரம்பம்

வலி-தென்மேற்கு மற்றும் வலி மேற்குப் பிரதேசசெயலகப் பகுதிகளில் வசிக்கும் 60 வயதுக்கு மேற்பட்ட முதியவர்கள் தொடர்பான ஆய்வு இவ்வாரம்முதல் இடம்பெற்று வருகின்றது.

வெளிக்கள சுகாதார உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சனசமூக நிலையங்களின் நிர்வாகிகள் ஆகியோரின் பங்களிப்புடன் இந்த ஆய்வு இடம்பெற்றுவருகின்றது.

ஆரோக்கியமான, வயது முதிர்ந்தோருக்கான வேலைத்திட்ட நடைமுறைக்கு ஏதுவாகவே இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுவது குறிப்பிடத்தக்கது. (43)

## ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம்.

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டமும், விவசாயக்குழுக் கூட்டமும் - இன்று காலை 10.30 மணிக்கும் 11.30 மணிக்கும் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எனவே, சம்பந்தப்பட்ட திணைக்களகங்களின் தலைவர்கள், தாங்களோ அல்லது தங்களின் பிரதிநிதிகளையோ உரிய நேரத்திற்கு அனுப்பிவைக்குமாறு பிரதேச செயலர் கேட்டுள்ளார்.

## விசர் நாயக்கடி தடுப்பு மருந்து முல்லை வைத்தியசாலையில் இல்லை

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் விசர் நாய்க்கடிக்கு பயன்படுத்தப்பட்டுவரும் ஏ.ஆர்.வி தடுப்பூசி மருந்து முடிவடைந்துள்ளதாக மாவட்ட வைத்திய அதிகாரி க.அழகேந்திரன் தெரிவித்துள்ளார்.

இத்தடுப்பூசி மருந்து முடிவடைந்ததன் காரணமாக, இத்தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளும் நோயாளர்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகி வருவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (122)


கலாலயா பயிற்சியகம்

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்

(பெருமாள் கோயிலுக்கு அண்மையில்)

✳ கேக் ஐசிங்
✳ உணவு தயாரித்தல்
✳ பூ வேலை
✳ உடை தயாரித்தல்
✳ கை வேலை
✳ FABRIC PAINTING

☆ மேற்படி பயிற்சிகள் எல்லாவற்றையும் பயில்வோருக்கு இலவசமாக கூந்தல் அலங்காரம், முக ஒப்பனை என்பன பயிற்றுவிக்கப்படும்.

☆ பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

சனி, ஞாயிறு பயிற்சிகள் ஆரம்பம் : 01.06.2003
கிழமை நாள் வகுப்புகள் ஆரம்பம் : 02.06.2003

தினமும் பி.ப. 2 மணி வரை
மேலும் விவரங்களை நேரில் அறிந்துகொள்ளலாம்
- இயக்குநர்.

(சி-959)


# சின்னஞ் சிறு செய்திகள்

### குப்பைக்குள் இருந்து வெடித்த ஷெல்

வீட்டு வளவினைத் துப்புரவு செய்து குப்பைகளை எரித்தபோது, அதனுள் இருந்து பாரிய சத்தத்துடன் ஷெல் ஒன்று வெடித்தது. மீசாலை ரயில் நிலையப்பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தின்போது - அதிர்ஷ்டவசமாக எவருக்கும் பாதிபபு ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. (25)

### விமான நிலையத்தில் நவீன ஸ்கானர்

'சார்ஸ்' நோயாளர்களை இனங்காணக்கூடிய விசேட 'ஸ்கானர்' ஒன்று நேற்று முன்தினம் - கட்டுநாயக்க விமானநிலையத்தில் பொருத்தப்பட்டது. இந்த உபகரணம், 7.5 மில்லியன் ரூபா பெறுமதிவாய்ந்ததென்பது குறிப்பிடத்தக்கது.

### மகாபொல வைபவவிழா

பல்கலைக்கழக மாணவர்களின் 2002/2003 ஆம் ஆண்டுக்கான மகாபொல புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு, எதிர்வரும் 31 ஆம் திகதி காலை 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இந்தப புலமைப்பரிசில்களை இந்துசமய விவகார அமைச்சர் மகேஸ்வரன் வழங்கவுள்ளார்.

### புனர்வாழ்வு ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம்

யாழ். மாவட்ட புனர்வாழ்வு சம்பந்தமான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் - நாளைமறுநாள் காலை 11 மணிக்கு யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது.

அரசஅதிபர் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில், யாழ். குடாநாட்டில் மேற்கொள்ளப்படவுள்ள புனர்வாழ்வு சம்பந்தமான பல முக்கிய விடயங்கள் பற்றி ஆராயப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, யாழ். மாவட்ட விவசாயக்குழுக் கூட்டமும் அன்றைய தினம் மாலை இரண்டு மணிக்கு யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது.


நிறைஞ்சனாஸ் சங்கானை

இன்று முதல்
எம்.ஜி.ஆர்., நாகேஷ்,
ஜெயலலிதா, வீ.கே.ராமசாமி
இரகசியப் பொலிஸ் -115
காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு
CASTAWAY (இரவு 8.45)
(சி-882)

ராஜா யாழ்ப்பாணம்.

3 வது வாரம்
இளைய தளபதி விஜய்,
மீராஜஸ்மின், கருணாஸ்
புதிய கீதை
தினசரி 10.30, 2.30, 6.30
சனி, ஞாயிறு 10.30, 2.30, 6.30, 9.30
(சி-883)





சிறு விளம்பரம்

விற்பனைக்கு

72 சிறி இலக்கமுடைய பழைய மொடல் குவோட்டா 375 லான்ட் - மாஸ்ரர் (பெட்டியுடன்) விற்பனைக்குண்டு. (ஒரு கைப் பாவனையில் உள்ளது) தொடர்பு:- சாந்தன்கடை, ஆறுகால்மடம். சந்திக்கும் நேரம் காலை 8.00 மணி - பிற்பகல் 1.00 வரை-மாலை 4.00 - 8.00 வரை (357)

# இடைக்கால நிர்வாகம் அமைப்பது தமிழீழத்தை அமைப்பதற்கு சமம்

## திலக் கருணாரட்ண கூறுகிறார்



வடக்கு - கிழக்குப் பகுதிகளில் இடைக்கால நிர்வாகத்தை அமைக்க வேண்டும் என்ற புலிகளின் கோரிக்கையை ஏற்கமுடியாது என்றும், இவ்வாறு இடைக்கால நிர்வாகம் அமைக்கப்படுவது அரசியலமைப்புச் சட்டத்துக்கு முரணானது என்றும் சிஹல உறுமய தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக, சிஹல உறுமயவின் தலைவர் திலக் கருணாரட்ண, செய்தியாளர் மத்தியில் கருத்து தெரிவித்தபோது -

முன்னர் வட- கிழக்குப் பகுதிகளில் இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்தி, அதைப் புலிகளிடம் கையளிக்கும் திட்டம் ஐக்கிய தேசியக்கட்சியில் விவாதிக்கப்பட்டதால்தான், அக்கட்சியிலிருந்து தான் வெளியேறியதாகவும் குறிப்பிட்டார்.

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்திக் கொடுப்பது, விடுதலைப் புலிகளுக்குத் தனித்தமிழீழத்தை அமைப்பதற்கான அங்கீகாரத்தைக் கொடுத்ததற்குச் சமனாகும். இந்த இடைக்கால நிர்வாகம் - தமிழீழத்துக்கே வழியை ஏற்படுத்திக் கொடுக்கும்.

ஒரே அரசியலமைப்பின் கீழ்தான், நாட்டின் அனைத்துப் பகுதிகளும் அபிவிருத்தி செய்யப்படவேண்டும். சட்டரீதியாகவே இத்தகைய அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும், திலக் கருணாரட்ண மேலும் தெரிவித்தார்.



மத்திய கிழக்கிலிருந்து நாடு திரும்பும் வழியில் கொழும்பு வந்திருந்த அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் அலெக்சாண்டர் டவுணரை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வரவேற்கிறார்.

### வெள்ளம் பாதித்த பகுதிகளில்

# இயல்புவாழ்க்கையை மீளக்கட்டியெழுப்ப ஜே.வி.பி. தொண்டர் படையணி களத்தில்

(கொழும்பு)

தென்பகுதியல் வெள்ளம் மற்றும் மண் சரிவு போன்ற இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவி நிவாரணப்பணிகளை முன்னெடுப்பதற்காக,ஜே.வி.பி - தொண்டர் படையணியொன்றை அமைத்துள்ளது.

ஐயாயிரம் பேரைக் கொண்ட இந்தத் தொண்டர் படையணி, தற்போது ஐந்து மாவட்டங்களில் - பணியில் ஈடுபட்டுள்ளது. இரத்தினபுரி, களுத்துறை, மாத்தளை, அம்பாந்தோட்டை, காலி ஆகிய மாவட்டங்களிலேயே ஜே.வி.பியின் தொண்டர் படையணி - மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றது.

ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாணசபை உறுப்பினர்களின் மேற்பார்வையுடன் இயங்கும் இந்தத் தொண்டர் படையணி, பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகளைச் செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளது.

அத்துடன், இப்பகுதிகளில் இயல்பு வாழ்க்கையை மீளக்கட்டியெழுப்புவதற்கும், சேதமடைந்துள்ள வீடுகள், வீதிகளைப் புனரமைப்புச் செய்வதற்கும் ஜே.வி.பியின் தொண்டர் படையணியினர் உதவிகளை வழங்கிவருவது குறிப்பிடத்தக்கது.

### இடம்பெயர்ந்த தமிழ் மக்கள்

# குச்சவெளியில் மீளக்குடியமர கடற்படையினர் கட்டுப்பாடு

(திருகோணமலை)

திருகோணமலை - மாவட்டம் குச்சவெளிப்பகுதியில் தமிழ் மக்கள் மீளக்குடியமர்வதற்குக் கடற்படையினர் தொடர்ந்தும் இடையூறுகளை ஏற்படுத்தி வருவதாக, இப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

குச்சவெளிப் பகுதியில் குடியிருந்த தமிழ்மக்கள் கடந்த கால இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்து வேறிடங்களில் வாழ்ந்து வந்தனர்.

புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னர் மீண்டும் குச்சவெளிப் பகுதியில் குடியமர தமிழ் மக்கள் ஏற்பாடுகளைச் செய்து வரும்போது, கடற்படையினர் கெடுபிடிகளை விதித்து வருகின்றனர்.

மீளக்குடியமரும் குடும்பத்தினர் தமது காணி உறுதிகளைத் தம்மிடம் சமர்ப்பிக்கவேண்டும் என்றும், கடற்படையினர் வற்புறுத்தி வருகின்றனர். அரச காணிகளைப் பெற்றோர் அதற்கான பத்திரங்களைச் சமர்ப்பித்தாலும், அதைக் கடற்படையினர் ஏற்றுக்கொள்ளாமல் நிராகரிப்பதாகவும் குச்சவெளிப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

# வீடுகளை இழந்த குடும்பங்களுக்கு அரசாங்கம் காணிகளை வழங்கும்

## அமைச்சர் ராஜித சேனாரட்ண நடவடிக்கை

அண்மைய வெள்ளப்பெருக்கு, மண்சரிவு சம்பவங்களால் வீடுகளை இழந்த குடும்பங்களுக்குக் காணிகளை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாகக் காணி அமைச்சர் ராஜித சேனாரட்ண தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 20 பேர்ச் காணி வழங்கப்படவுள்ளது. வெள்ள அனர்த்தங்களால் - 24 ஆயிரம் குடும்பங்கள் முற்றாக வீடுகளை இழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, அண்மைய இயற்கை அனர்த்தங்களால் 250 பேர் இறந்தது உறுதிசெய்யப்பட்டதாக அனர்த்த முகாமைத்துவக் குழுவின் தலைவர் அமைச்சர் கரு ஜெயசூரிய தெரிவித்தார். முன்னர் இத்தொகை 266 என அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால், இறந்ததாகக் கருதப்பட்ட 16 பேர் உயிருடன் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. மாத்தறை மாவட்டத்தில் தொடர்ந்தும் பத்தாயிரம் பேருக்குச் சமைத்த உணவு வழங்கப்பட்டு வருகின்றது.

அதேவேளை, வெள்ளம் வடிந்து வருவதையடுத்து, பாதிக்கப்பட்ட பகுதிகளில் இயல்பு வாழ்கையை மீளக்கட்டியெழுப்பும் நடவடிக்கைகளில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

பொதுமக்களின் அத்தியாவசியத் தேவைகளான - குடிநீர்,மின்சாரம், போக்குவரத்து,தொலைபேசி வசதிகளைச் சீரமைக்கும் நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதேவேளை, பாதிக்கப்பட்ட பகுதிகளில் இயங்கிய 98 தொழிற்சாலைகளில், 96 தொழிற்சாலைகள் மீண்டும் செயற்பட ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மாத்தறை மாவட்டத்தில் சில பகுதிகளில் இன்னமும் வெள்ளம் வடியவில்லை எனத் தெரியவருகிறது. இதனால், இயந்திரங்கள் மூலம் நீரை அகற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை, க.பொ.த. உயர்தரப் பரீட்சை மீண்டும் ஒத்திவைக்கப்படமாட்டாது என்று, அனர்த்த முகாத்துவக் குழுத்தலைவர் அமைச்சர் கரு ஜெயசூரிய தெரிவித்தார். எந்தவொரு பரீட்சார்த்தியும் பாதிக்கப்படாத வகையில் பரீட்சைகளை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# வெள்ளப்பெருக்கு அனர்த்தத்தால் 13000 ஹெக்ரெயர் பயிர் அழிவு!

(கொழும்பு)

அண்மையில் தென்பகுதியில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் 13 ஆயிரத்து 200 ஹெக்ரெயரில் செய்கை பண்ணப்பட்டிருந்த பயிர்கள் முற்றாக அழிவடைந்திருப்பதாக விவசாயத் திணைக்களம் அறிவித்துள்ளது.

குறிப்பாக, நெற்பயிர் விதைக்கப்பட்ட சில நாட்களுக்குள் இந்த அழிவு ஏற்பட்டதால், தேசிய உற்பத்திக்கு அதிக பாதிப்பை இது ஏற்படுததாது என்று விவசாயத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

மாத்தறை மாவட்டத்தில் - 6200 ஹெக்ரெயரில் பயிரிடப்பட்ட நெல் முற்றாக அழிவடைந்துள்ளது. காலியில் - 4000 ஹெக்ரெயரிலும், களுத்துறையில் - 500 ஹெக்ரெயரிலும், இரத்தினபுரியில் - 1000 ஹெக்ரெயரிலும், அம்பாந்தோட்டையில் 800 ஹெக்ரெயரிலும் பயிரிடப்பட்ட நெற் பயிர்கள் அழிவடைந்துள்ளன.

அழிவடைந்துள்ள நெற்பயிருக்குப் பதிலாக மீள்நடுகை செய்வதற்கான வழிமுறைகள் மற்றும் வசதிகள் செய்து கொடுப்பது குறித்தும் அரசாங்கம் ஆராய்ந்து வருவதாகத் தெரியவருகின்றது.

# வலய மட்டக் குழுக் கூட்டத்தில் காணிப் பிணக்குகள் ஆராய்வு

(மட்டக்களப்பு)

முஸ்லிம்களின் காணிப் பிணக்குகள் தொடர்பாக,ஆராயும் மட்டக்களப்பு வலய மட்ட உபகுழுவின் கூட்டம் நேற்றுமுன்தினம் மட்டக்களப்பு மாவட்ட அரச செயலகத்தில் இடம்பெற்றது.

இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள காணிகள் தொடர்பான பிரச்சினைகள் குறித்து இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

அரச அதிபர் மௌனகுருசாமி தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் அரசகாணிகளில் அத்துமீறி இடம்பெற்றுள்ள குடியேற்றங்கள் மற்றும் தனியார் காணிகளில் இடம்பெற்றுள்ள குடியேற்றங்கள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் அரச கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள காணிகள் தொடர்பான பிரச்சினைகள் இனங்காணப்பட்டு, நாளை வவுணதீவில் நடைபெற்றுள்ள மாவட்ட மட்ட உப குழுவின் கூட்டத்தில் முன்வைக்கப் படவுள்ளது.

பொலிஸ் நிலையங்கள் மற்றும் இராணுவ முகாம்கள் அமைந்துள்ள காணிகளைப் பார்வையிடுவதற்கும் இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

படையினர் நிலைகொண்டுள்ள இடங்களில், பொதுமக்களை மீள் குடியமர்த்துவதற்கு வசதியாகவே இப்பகுதிகளைப் பார்வையிட முடிவு செய்யப்பட்டது.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு, புலிகள், அரசதரப்பு மற்றும் முஸ்லிம் தரப்பு பிரதிநிதிகள் இணைந்து படைநிலைகள் அமைந்துள்ள பகுதிகளைப் பார்வையிடுவர் என்பது குறிப்பிடத்தக்கது.

### உயர்நீதிமன்றத்தில் வழக்கு

லஞ்ச - ஊழல் ஆணைக்குழு இயங்குவது-அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணானது என்று உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆணைக்குழுவின் ஒரு ஆணையாளர் இறந்து பல காலமாகியும் அப்பதவிக்குரிய ஒருவர் நியமிக்கப்படாமல் இருப்பதால், இந்த துணைக்குழு செயற்படுவது சட்டவிரோதம் என்று அவர் தனது மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

# அதிபர்,ஆசிரியருக்கு சம்பள நிலுவை அடுத்த மாதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கடமையாற்றும் ஆசிரியர்,அதிபர்களுக்கு சம்பள நிலுவைகளை வழங்க கல்வியமைச்சர் அனுமதி வழங்கியுள்ளார்.

நீண்டகாலமாகவே ஆசிரியர், அதிபர்களுக்கான நிலுவை வழங்கப்படாததால் அவர்கள் அதனைப் பெறமுடியாதநிலை ஏற்பட்டது. இந்நிலுவையை உடன் வழங்க ஏற்பாடுகள் செய்யும்படி, கல்வியமைச்சரைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கோரியதையடுத்து, ஜூன்மாதம் முற்பகுதியில் நிலுவையை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



ரோக்கியோ மாநாடு தொடர்பாக ஆராய ஜப்பான் சென்றுள்ள நோர்வேப் பிரதமர் பொண்டவிக் தனது மனைவியுடன் காணப்படுகின்றார்.

# மகாபொல புலமைப்பரிசு நிதியை ஜனாதிபதி நிதியம் குறைக்கவில்லை

## ஜனாதிபதி சந்திரிகா கூறுகிறார்

மகாபொல புலமைப்பரிசில் நிதிக்கான நிதியை ஜனாதிபதி நிதியம் குறைக்கவில்லை என்று, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

தேசிய லொத்தர் சபை மூலம் கிடைக்கின்ற வருமானம் முழுவதும் ஜனாதிபதி நிதியத்துக்கே வந்து சேரவேண்டும். ஜனாதிபதி நிதியம்- மகாபொல புலமைப்பரிசிலுக்கான நிதியை வழங்கவில்லை எனக் குற்றச்சாட்டுக்கள் எழுப்புகின்றார்கள். இதில் எந்த உண்மையும் இல்லை.

வேறு புலமைப்பரிசில்களும் ஜனாதிபதி நிதியத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டிருப்பதால், மகாபொல புலமைப்பரிசிலை 15 சதவீதத்தால் குறைக்கத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ஆனால், புலமைப்பரிசில் பணத்தொகை எந்தக் குறைப்பும் செய்யப்படமாட்டாது என்றும் ஜனாதிபதி சந்திரிகா மேலும் தெரிவித்துள்ளார்.

# சம உரிமை வழங்கப்படாவிட்டால் நாடு பிரிவதைத் தடுக்க முடியாது

## அமைச்சர் மகிந்த விஜேசேகர கூறுகிறார்

(கொழும்பு)

வடபகுதியில் இருந்தாலும், தென்பகுதியில் வெள்ளப் பெருக்கால் பாதிக்கப்பட்டவர்கள் தமது சகோதரர்கள் என நினைத்து புலிகள் செய்துள்ள உதவி, அவர்கள் மீது - பெரும் எதிர்பார்ப்பையும், நம்பிக்கையையும் ஏற்படுத்தியுள்ளது-

-என கடற்தொழில் நீரியல் வள் அமைச்சர் மகிந்த விஜேசேகர தெரிவித்தார். மாத்தறை மாவட்டச் செயலகத்தில் விடுதலைப் புலிகளுக்கு அளித்த வரவேற்பு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மாத்தறை மாவட்டச் செயலகத்தில் அமைச்சர் மகிந்த விஜேசேகர - மாவட்டச் செயலாளர், பிரதேச செயலாளர்கள், கிராம அலுவலர்கள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் திரண்டு, சிங்களப் பாரம்பரிய முறைப்படி புலிகளுக்கு பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் - அமைச்சர் மகிந்த விஜேசேகர மேலும் பேசுகையில்-

தென்பகுதி மக்களுக்கு நேசக்கரம் நீட்டுவதன் மூலம், புலிகள் தமது மனிதநேயத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

ஒரே நாட்டில்- மத்திய அரசு, பிராந்திய அரசு என்ற ரீதியில் பிரச்சனைகளைப் பேசித் தீர்த்துக் கொள்ளலாம் என்பதற்கு புலிகளின் மனிதநேயச் செயற்பாடுகள் எடுத்துக்காட்டாக விளங்குகின்றன.

இனங்களுக்கிடையே பிரச்சினை இல்லை. அபிவிருத்தியில்தான் பிரச்சினை இருக்கிறது. நாட்டு மக்கள் பிரதேச ரீதியாகவோ, இனரீதியாகவோ பேதம் பார்க்கப் படக்கூடாது. சகலருக்கும் சம வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும். இல்லையேல் நாடு பிரிந்துவிடும்.

எல்லோரும் ஒரே நாட்டில் வாழ வேண்டுமானால், சம உரிமை வழங்கப்பட வேண்டும். இதை இனவாதிகளும் புரிந்து கொள்ளவேண்டும். இனவாதிகளைப் பொருட்படுத்தாமல் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் முனைப்புடன் செயற்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# கண்ணிவெடி செயற்பாடுகளை ஒருங்கிணைக்க கிளிநொச்சியில் புதிய அலுவலகம் திறந்துவைப்பு

சகல விதமான கண்ணிவெடிச் செயற்பாடுகளை ஒருங்கிணைப்பதற்காக, கண்ணிவெடி செயற்பாட்டு ஒருங்கிணைப்புச் செயலகம் கிளிநொச்சியில் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் - தமிழீழ தேசியக் கொடியினை கிளிநொச்சி மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் முரளி ஏற்றிவைத்தார்.

ஈகச்சுடரினை அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான இணைப்பாளர் தியாகராஜா ஏற்றினார். அவுஸ்திரேலிய தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தைச் சேர்ந்த அ.பரராஜசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், நிறுவனப் பெயர்ப் பலகையினை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி.இராசநாயகம் திரைநீக்கம் செய்து வைக்க, அலுவலக நாடாவை வெட்டி, சர்வதேச தமிழர் புனர்வாழ்வுக்கழக பணிப்பாளர் கலாநிதி மகேஸ்வரன் அலுவலகத்தைத் திறந்துவைத்தார்.

சிறப்புரைகளை - தமிழர் புனர்வாழ்வுக்கழக திட்டப்பணிப்பாளர் லோறன்ஸ் கிறிஸ்ரி, கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி.இராசநாயகம், ஐக்கிய நாட்டு அபிவிருத்தி திட்டப் பிரதிநிதி யூடிக்கிரேசன், கலாநிதி ஜோய் மகேஸ்வரன், மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவு இணைப்பாளர் பரணி ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்நிகழ்வில் - டென்மார்க் கண்ணிவெடி அமைப்பு, பிரித்தானிய கண்ணிவெடி அகற்றும் அமைப்பான ஹலோ ட்ரஸ்ட் மற்றும் மக், என்.பி.ஏ, யு.என்.டி.பி., யுனிசெப் ஆகிய சர்வதேச அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

கண்ணிவெடி அகற்றுதல், கண்ணிவெடிகளை அடையாளம் காணுதல், கண்ணிவெடி விழிப்புணர்வு போன்ற செயற்பாடுகளை இலகுபடுத்தி ஒருங்கிணைந்து செயற்படுவதே இச் செயலகத்தின் பிரதான பணியாக இருக்கும் என தமிழர் புனர்வாழ்வுக்கழக நிறைவேற்றுப் பணிப்பாளர் றெஜி தெரிவித்தார்.

மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவு இணைப்பாளர் யோகன் நன்றியுரையாற்றி, நிகழ்வை நிறைவு செய்து வைத்தார்.

(க)

# சின்னஞ்சிறு செய்திகள்

### சித்தங்கேணியில் இல்ல மெய்வல்லுநர் போட்டி

(சித்தங்கேணி)

சித்தங்கேணி பிளவத்தை அ.மி.த.க பாடசாலையும், திருநாவுக்கரசு வித்தியாலயமும் இணைந்து நடாத்தும் - வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி, இன்று பிற்பகல் 2 மணிக்கு வட்டுக்கோட்டை சிவன் கோவில் வீதியில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் - சங்கானைக் கல்விககோட்ட அதிகாரி சி.செல்லையா பிரதம விருந்தினராகவும், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் எஸ்.வீ.புவனேந்திரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

### கோம்பயன்மணல் பாலத்தில் பெரிதாகும் துவாரம்

(சுதுமலை)

கோம்பயன் மணல் மயானத்துக்கு முன்பாகவுள்ள பாலத்திற்கு மேல், தார் வீதியில் பாரிய துவாரம் ஏற்பட்டு வருகிறது. சிறிதாக இருந்த இந்தத்துவாரம் நாளடைவில் விரிவடைந்து வருகின்றது.

இதனால், இரவு வேளைகளில் இவ்வீதியால் பயணிக்கும் பாதசாரிகள் பெரும் ஆபத்துக்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்

(91)

### முத்திரைகள் வந்தன

யாழ். பிரதம தபாலகத்திற்கு 500 ரூபா, 1000 ரூபா பெறுமதியுடைய முத்திரைகள் கிடைக்கப்பபெற்றுள்ளன. அவற்றைப் பொது மக்கள் கொள்வனவு செய்யலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

### திருநெல்வேலியில் நாய்கள் அழிப்பு

திருநெல்வேலிச் சந்தை, பல்கலைக்கழக வளாகம், பணிகர் வளவுப் பகுதி ஆகியவற்றில் கட்டாக் காலிகளாகத் திரியும் நாய்களை பிடித்து அழிக்கும் பணி இன்று மேற்கொள்ளப்படவுள்ளது.

எனவே - வளர்ப்பு நாய்களைக் கட்டி வளர்க்குமாறும், வளர்ப்பு நாய்களுக்கான உரிமைத்தகட்டினை நல்லூர் உப அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறும் நல்லூர் பிரதேசசபைச் செயலாளர் அறிவித்துள்ளார்.

### உயர்தொழில்நுட்ப நிறுவகப் பரீட்சைத்திகதி அறிவிப்பு

(மீசாலை)

உயர்தொழில்நுட்ப நிறுவனத்தின் சகல பாடநெறிகளுக்குமான முதல் அரையாண்டுப் பரீட்சைகள் அனைத்தும் ஜூன் மாதம் 16 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

மேற்படி பரீட்சை ஜூன் 2 ஆம் திகதி ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் - தென்பகுதியில் ஏற்பட்டுள்ள வெள்ள அனர்த்தம் காரணமாக நாட்டிலுள்ள அனைத்து உயர் தொழில்நுட்ப கல்லூரிகளினதும் பரீட்சைகள் பிற்போடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (25, 12)

### உதைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

(பாஷையூர்)

குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழகத்தின் அனுசரணையுடன், குருநகர் சூசையப்பர் விளையாட்டுக்கழகம் நடத்தும் - தூயஒளி வெற்றிக்கிண்ணத்துக்கான உதைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி எதிர்வரும் முதலாம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

ஆரம்பச் சுற்றுப் போட்டியில் சென். மேரிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சென். மைக்கல் விளையாட்டுக்கழக அணியும்,

- சென். றோக்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பொற்பதி விளையாட்டுக்கழக அணியும் மோதவுள்ளன. (119)

### புகைப்பொருள் எதிர்ப்பு தினம்

வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம் நடத்தும், சர்வதேசப் புகைப்பொருள் எதிர்புதினம் எதிர்வரும் சனிக்கிழமை பி.ப 3 மணிக்கு அளவெட்டி பாரதி சனசமூக நிலைய முன்றலில் நடைபெறவுள்ளது.

இதில் - புகைப்பொருள் பாவனையில் இருந்து இளம் சந்ததியினரைக் காப்பாற்றும் பொறுப்பு பெற்றோர்களிடம் உள்ளதா? அல்லது ஆசிரியர்களிடம் உள்ளதா? என்ற தலைப்பில் பட்டிமன்றமும் விழிப்பு நாடகமும் இடம்பெறவுள்ளது.


## வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

மூன்றாவது அகவையில்



பெயர் : நா. சங்கீதன்
முகவரி: மகாத்மா வீதி, நெல்லியடி.

மூன்றாவது அகவையில்



பெயர் : ஜெ. தினேஷ்காந்
முகவரி: ஐயா'கடையடி, மீசாலை கிழக்கு.

எட்டாவது அகவையில்



பெயர் : பி. அனுராகன்
முகவரி: பத்தியாவத்தை, நெல்லியடி.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------

முகவரி :------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------------
பெற்றார் ஒப்பம்


## பொதுஜன ஐக்கிய முன்னணியின்

# தேசியப்பட்டியல் நியமனத்தை ரத்துச் செய்யுமாறு மனு தாக்கல்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் தேசியப்பட்டியலை ரத்துச் செய்ய உத்தரவு பிறப்பிக்குமாறு கோரும் மனுவை, இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்வதென உயர் நீதிமன்றம் தீர்மானித்திருக்கிறது.

லங்கா சமசமாசக் கட்சியின் பொதுச் செயலாளர் பட்டி வீரக்கோன் இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

நீதிமன்றத்தில் விசாரணைகள் ஆரம்பமாகும்போது தமது தரப்பு நியாயங்களை விளக்க நடவடிக்கை எடுக்குமாறு - இரு தரப்புச் சட்டத்தரணிகளுக்கும் உத்தரவு பிறபபிக்கப்பட்டுள்ளது.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் செயலாளர், தேர்தல் ஆணையாளர், தேசியப்பட்டியலில் இடம்பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

பொதுத் தேர்தலுக்கு முன்னர் செய்து கொண்ட உடன்படிக்கையின்படி, லங்கா சமசமாசக் கட்சியும் தேசியப்பட்டியலில் இடம்பெற்றிருக்க வேண்டும் என மனுதாரரால் குறிப்பிடப்பட்டுள்ளது.

### சுதுமலை ஆலய மஹோற்சவம்

சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய மஹோற்சவம் இன்று காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி - தொடர்ந்து 18 நாட்களுக்கு நடைபெறவுள்ளது. உற்சவ காலங்களில் இரவு 8 மணிக்கு பாலசண்முகனின் பெரிய புராணத்தொடர் சொற்பொழிவும் நடைபெறவுள்ளது. (91)

# இரவு நேர மின்சார விநியோகம் தென்மராட்சியில் இன்றுமுதல்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிப்பகுதியில் இன்று முதல் இரவு நேரத்திலும் மின்சார விநியோகம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதுவரை காலமும் சாவகச்சேரி பிரதேசத்திற்கு மின்பிறப்பாக்கி மூலம், காலை 10 மணியில் இருந்து பி.ப 2.30 மணிவரையிலுமே மின்சாரம் வழங்கப்பட்டு வந்தது. பொதுமக்களின் நன்மைகருதி இன்று முதல் இரவு 7 மணியில் இருந்து இரவு 10 மணிவரையும்- மூன்று மணிநேரம் அதிகமாக மின்விநியோகம் வழங்கப்படவுள்ளது.

வெகுவிரைவில் இப்பகுதிக்கு முழுநேர மின்சார விநியோகத்தை மேற்கொள்வதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ரா,சு)

### சீருடை முத்திரையை பெறுமாறு அறிவிப்பு

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் இதுவரை மாணவர் சீருடைக்கான முத்திரைகள் பெற்றுக்கொள்ளாதவர்கள் - கரவெட்டி பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொண்டு சீருடைக்கான முத்திரையைப் பெற்றுக் கொள்ளுமாறு பிரதேசசெயலர் அறிவித்துள்ளார். (116)

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை

## மாணவருக்கான முன்னாயத்தப் பயிற்சிகள்



## மாணவர் மலர்

01. புத்தக விற்பனை நிலையம் ஒன்றுக்குச் சென்றால் காணக்கூடிய பொருட்களைக் கட்டத்திற்குள் தரப்பட்டுள்ள பொருட்களில் இருந்து தெரிவுசெய்து வட்டமிடுக.

| |
|---|
| பென்சில், தும்புத்தடி, அப்பியாசக் கொப்பி, கோப்பை, தூரிகை, அழிறப்பர், தந்திப்படிவம், மணியோடர்ப்படிவம், பேனா, கதைப்புத்தகம், முதல்நாள் உறை, வெண்கட்டி, சித்திரக்கொப்பி, அகராதி, சேமிப்புப் புத்தகம், சஞ்சிகை. |

02. கமலநாதன் நூல் நிலையத்திற்குச் சென்றான். நூலகத்தில் அமர்ந்திருந்த ஆசிரியர் ஒருவர் அவனது நடவடிக்கைகளை அவதானித்தார்.

A. அவன் கதைப்புத்தகத்தை எடுத்து மனதுக்குள் படிக்காமல் உரத்துப்படித்தான்.
B. நூலகத்தில் அமர்ந்திருக்கும்போது, மற்றவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதையும் அவதானித்தான்.
C. கதைப்புத்தகத்தைப் படிக்கும்போது, இடையிடையே குறிப்புக்களையும் எடுத்துக்கொண்டான்.
D. கதைப்புத்தகத்தை வாசித்தபின் உரிய இடத்தில் வைத்தான்.
E. மற்றவர்களுக்குத் தொந்தரவு செய்யாமல் மெல்ல வெளியேறினான்.

(அ) கமலநாதன் நூலகத்துக்குச் சென்று, நூல்களைப் படிக்கும்போது கடைப்பிடிக்க வேண்டிய விதியை மீறிவிட்டான். அவ்விதி எது?

..................................................................

..................................................................

(ஆ) கமலநாதன் நூலகத்தில் கடைப்பிடித்த நல்ல பழக்கவழங்கங்கள் மூன்று தருக?
1. ..................................................................
2. ..................................................................
3. ..................................................................

(இ) கமலநாதனிடம் இருந்த தீய பழக்கம் எது?

..................................................................

..................................................................

03. கீழே தரப்பட்டுள்ள A பகுதியை B பகுதியுடன் தொடர்படுத்துக.

| A பகுதி | B பகுதி |
|---|---|
| 1. பணத்தை சேமித்தல் | வானிலை ஆராய்ச்சி நிலையம் |
| 2. நிகழ்ச்சிகளைப் பார்க்க உதவுவது | ஆயுர்வேத வைத்தியசாலை |
| 3. பதிவுத்தபாலில் அனுப்புதல் | தேசிய சேமிப்பு வங்கி |
| 4. இலவச வைத்தியம் செய்தல் | வானொலி. |
| 5. நியாய விலையில் பொருட்களைப் பெற்றுக்கொள்ளலாம். | தபாற்கந்தோர். |
| 6. நிகழ்ச்சிகளைக் கேட்க உதவுவது | அரச வைத்தியசாலை |
| 7. மூலிகை மருத்துவம் செய்தல் | பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் |
| 8. வானிலை அறிவித்தல் | தொலைக்காட்சி |

04. பின்வரும் படத்தைப் பார்த்து கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.




1. பாடசாலையில் இருந்து வைத்தியசாலை வரையிலான தூரம் யாது? (.........)
2. சந்தையிலிருந்து வங்கி வரையிலான தூரம் யாது? (.........)
3. பாடசாலையில் இருந்து வைத்தியசாலை வரையிலான தூரத்திற்கும், சந்தையிலிருந்து பொலிஸ் நிலையம் வரையிலான தூரத்திற்கும் இடையிலான வித்தியாசம் யாது? (.........)
4. பொலிஸ் நிலையத்திலிருந்து புகையிரத நிலையத்திற்குச் செல்லவேண்டுமானால், எத்தனை கிலோமீற்றர் தூரம் செல்லவேண்டும்? (.........)
5. புகையிரத நிலையம் - வங்கிக்கு எத்தனை கிலோமீற்றர் தூரத்தில் உள்ளது? (.........)
6. பாடசாலையில் இருந்து சந்தை 36 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ளது எனின், வைத்தியசாலைக்கும், சந்தைக்கும் இடையே உள்ள தூரம் யாது? (.........)
7. பாடசாலையிலிருந்து- சந்தை, பொலிஸ் நிலையம் சென்றடைய எத்தனை கிலோ மீற்றர் தூரம் பயணம் செய்யவேண்டும்? (.........)
8. பாடசாலையிலிருந்து வைத்தியசாலையூடாகச் சென்று, சந்தையை அடைந்து, பின்னர் பொலிஸ் நிலையம் செல்ல எத்தனை கிலோ மீற்றர் பயணம் செய்யவேண்டும்? (.........)

05. சமச்சீரான படத்தை ஆக்கக்கூடிய பகுதிகளைத் தெரிவுசெய்து அவற்றினைக் கோடுகளினால் இணைக்குக.




06. பின்வரும் பிரசினங்களைத் தீர்க்குக.

1. ஓர் இறாக்கையில் - ஒரு வரிசையில் 17 போத்தல்கள் வீதம் அடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறான 18 வரிசைகளில் உள்ள போத்தல்களின் எண்ணிக்கை யாது? (..............)
2. பந்து ஒன்றின் விலை ரூபாய் 36 ஆகும். அவ்வாறான 13 பந்துகளின் விலை யாது? (..............)
3. ஒரு மென்பானப்போத்தலின் விலை 13 ரூபாய் 50 சதம் ஆகும். 26 மென்பானப் போத்தல்களின் விலை யாது? (..............)
4. ஒரு வாளியில் 4l 250ml நீர் இருந்தது. அவ்வாளியில் 5l 275ml நீர் ஊற்றப்பட்டது. அதன்பின் 3l 325ml நீர் ஊற்றப்பட்டது. இப்போது வாளியிலுள்ள நீரின் மொத்தக் கனவளவு யாது? (..............)
5. இலங்கையில் தற்போது பயன்படுத்தப்படும் ரூபாய் 1000 வரையிலான தாள் காசுகள் எவை?

..................................................................

07. கீழே தரப்பட்டுள்ள இரண்டு வட்டங்களுக்குள் ஒத்த கருத்துள்ள சொற்கள் உள்ளன.
A வட்டத்துக்குள் உள்ள சொல்லுக்குத் தொடர்புள்ள ஒத்த கருத்துள்ள சொல்லை
B வட்டத்துக்குள் உள்ள சொற்களில் இருந்து தெரிவுசெய்து எழுதுக.

**A**

எழில்,
சோலை, நங்கை,
சீயம், பிரியம்,
அகிலம்,
கோ, மனை,
மெய், அடவி,
தெரு, சாதம்.

**B**

வனப்பு,
பாசம், கானகம்,
பொழில்,
புவி, கேசரி, மேனி,
வேந்தன், சாலை,
அகம், அடிசில்,
வனிதை.

1. .............. 2. .............. 3. .............. 4. ..............
5. .............. 6. .............. 7. .............. 8. ..............
9. .............. 10. .............. 11. .............. 12. ..............

08. 'நான் அதிகாலையில் எழுந்து .......' என்ற தலைப்பில் ஆறு வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் நான்கு சொற்களுக்குக் குறையாது இருத்தல்வேண்டும்.

(1) ..................................................................
(2) ..................................................................
(3) ..................................................................
(4) ..................................................................
(5) ..................................................................
(6) ..................................................................

(தொடரும்...)

வி.என்.எஸ். உதயசந்திரன்
B.A. (Cey), B.Ed (Hons), Dip. in Ed.

# க.பொ.த. (சாதாரணதர)மாதிரி வினாத்தாள்

# கணிதம் - பகுதி I

01) 1kg சீனியின் விலை ரூபா. 42 எனின் 300g சீனியின் விலை யாது?

02) சுருக்குக :- $5-(1\frac{3}{4}+1\frac{1}{2})$

03) தீர்க்க :- $3.(x-5) = 6$

04) 


தரப்பட்ட உருவில் நிறந்தீட்டப்பட்ட பகுதியைத் தொடைக் குறியீட்டில் தருக?

05) சுருக்குக:- $\frac{3x+6}{x(x+2)}$

06) ஒழுங்கான பல்கோணி ஒன்றில் புறக்கோணம் ஒன்றின் பருமன் $24^\circ$ ஆயின், அதன் பக்கங்களின் எண்ணிக்கை யாது?

07) $A=2\pi r^2+2\pi rh$ எனுஞ் சூத்திரத்தில் h ஐ எழுவாயாகத் தருக?

08) $u=10$, $a = -8$, $t=4$ என்பவற்றை $v=u+at$ எனுஞ் சூத்திரத்தில் பிரதியீடு செய்து v ஐ கணிக்குக?

09) என்னிடம் ரூபா 100 உள்ளது. ரூபா x படி 5 பேனாக்களையும், ரூபா y படி 7 கொப்பிகளையும் வாங்கியபின், மீதியாகவுள்ள பணத்திற்கான அட்சர கணிதக் கோவையைத்தருக?

10) 10cm, 8cm, 5cm எனும் அளவுகளையுடைய முக்கோணியானது கூர்ங்கோண முக்கோணியா? செங்கோண முக்கோணியா? விரிகோண முக்கோணியா? எனக் குறிப்பிடுக.

11) 5 ரூபா நாணயமொன்றும், 2 ரூபா நாணயமொன்றும் சுண்டப்படுகின்றன. பெறப்படும் மாதிரி வெளியை எழுதுக?

12) $3y=5x-6$ எனும் சமன்பாட்டின் படித்திறனையும், வெட்டுத் துண்டையும் எழுதுக?

13) 


உருவில் x இன் பெறுமான்த்தைக் காண்க?

14) 


தரப்பட்ட உருவின்
i) சுற்றளவு யாது?
ii) பரப்பளவு யாது?

15) $\frac{22}{7} \times 135 - \frac{22}{7} \times 35$ என்பதன் பெறுமானத்தைக் காரணிகள் பற்றிய உமது அறிவைப் பயன்படுத்திக் காண்க?

16) சுருக்குகு:- $\frac{0.01 \times 0.001}{0.1}$

17) மட$_{10}$ 0.01 என்பதன் பெறுமானம் காண்க?

18) 


உருவில்
i) AC இன் நீளத்தைக் காண்க?
ii) Sin $A\hat{C}B$ ஐ எழுதுக?

19) உருவில் X இன் பெறுமானத்தைக் காண்க?




20) 14cm ஆரையுடைய அரைவட்டத்தின் சுற்றளவு யாது?

21) இரண்டு முக்கோணிகள் ஒருங்கிசைவதற்கான நிபந்தனைகளைச் சுருக்கமாகத் தருக?

22) ஒரு நிலையான புள்ளி ஒன்றிலிருந்து எப்பொழுதும் 5cm தூரத்தில் அசையும் துணிக்கை ஒன்றின் ஒழுக்கு யாது?

23) ஒரு வேலையைச் செய்து முடிப்பதற்கு 8 மனிதர்களுக்கு 10 நாட்கள் எடுக்கின்றது.
i) எத்தனை மனித நாட்கள் எனக் காண்க?
ii) இவ்வேலையை 5 மனிதர்கள் செய்து முடிக்க எத்தனை நாட்கள் எடுக்கும்?

24) காரணிப்படுத்துக:- $x^2- x- y^2- y$

25) 7cm ஆரையும் 18cm உயரமும் உள்ள உருளை வடிவான தாங்கியின் கனவளவு யாது?

26) $\sin 60^\circ = 2 \sin 30^\circ \cos 30^\circ$ என நிறுவுக?

27) $3x - 2y = 9$
$x - 2y = 7$
இவ் ஒருங்கமை சமன்பாடுகளைத் தீர்க்காமல் $(x-y)$ இன் பெறுமதியைக் காண்க?

28) A, B இற்கிடையிலான விகிதம் 2:3. B, C இற்கிடையிலான விகிதம் 5:4 ஆயின் A, B, C ஆகியவற்றிற்கிடையிலான விகிதம் காண்க?

9) $5\sqrt{3} - 2\sqrt{3} + \sqrt{3}$ ஐச் சுருக்குக.

0) 


உருவில் $B\hat{O}D$ இன் பெறுமதியைக் காண்க?

**தொகுப்பு S.S.கண்ணன்**

---

## வடக்கு – கிழக்கு மாகாண பொதுச் சேவையின் சமூகசேவை உத்தியோகத்தர், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்

## பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2003

வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் இப்பரீட்சையானது 2003 ஜூன் மாத்தில் நடைபெற இருப்பது யாரும் அறிந்ததே. இப்பரீட்சைக்கெனப் பின்வருமாறு பரீட்சைப் பரப்பெல்லை தரப்பட்டுள்ளபோதும், தற்போது வழங்கப்படும் மாதிரி வினாத்தாள்களை அடிப்படையாகக் கொண்டு நுண்ணறிவு வினாக்களைப் பயிற்சி செய்வதுடன், கூடியளவு பொது அறிவுத் தகவல் களையும் சுயமாகப் பெற்று கிரகித்தல் வேண்டும். இப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் பொது அறிவில் தேடல் மூலமான கல்வி, நுண்ணறிவில் கூடியளவு பயிற்சி என்பவற்றைப் பெறுவதன் மூலமே அதி சிறப்புச் சித்தியைப் பெறமுடியும் என்பது வெளிப்படை

**இப் பரீட்சையானது பின்வருமாறு வடிவமைக்கப்பட்டுள்ளது.**

☞ *வினாத்தாள் I*

*பொது உளச்சார்பு - 1 மணித்தியாலம் - 100 புள்ளிகள்*

சொற் தொடர்கள், எண்கள் பற்றி உருவ வடிவங்களில் கொடுக்கப்படுகின்ற சிக்கலான விடயத்தில் பரீட்சார்த்திகள் காட்டுகின்ற அனுமானங்கள் மற்றும் பதில்களை ஆதாரமாகக் கொண்டு அப்பிரச்சினைகள் தொடர்பான கருத்துக் கிரகிப்பு, அளவீட்டுணர்தல் மற்றும் கால அவகாசங்களுக்கு இடையில் தொடர்புகளைப் புரிந்துகொள்வதில் பரீட்சார்த்திகளுக்கு இருக்கின்ற திறமையை அளவிடுதல்.

☞ *வினாத்தாள் II*

*பொது அறிவு - 2 மண'த்தியாலங்கள் - 100 புள்ளிகள்*

தேசிய, பிராந்திய மற்றும் உலகம் பூராவுமுள்ள பல தரப்பட்ட அமைப்பு சுற்றாடல்களிலும், எமது சமூக்திலும் நிலவுகின்ற சமூக, கலாசார, கல்வி, அரசியல் விஞ்ஞானம், பொருளாதாரம், விளையாட்டு ஆகியவற்றோடு தொடர்புடைய ஏனைய காரணிகள் தொடர்பாகவும் பரீட்சார்த்திகளின் அறிவையும், தெளிவையும் அளவிடுதல்.

☞ *மாதிரி வினாத்தாள் - பொது உளச்சார்பு - 1 மணித்தியாலம்.*

குறிப்பு: அண்மையில் நடைபெற்ற போட்டிப் பரீட்சை வினாத் தாள் MCQ முறையில் வடிவமைக்கப்பட்டதால், இவ்வினாத் தாளும் அம்முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

✷ 01 தொடக்கம் 05 வரையிலான வினாக்கள் பின்வரும் அட்டவணையை அடிப்படையாகக் கொண்டதாகும்.

| நிரைகள் | நிரல்கள் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | அ | ஆ | இ | ஈ | உ | ஊ |
| i | வீடு | மொய்த்தது | சுடுகாடு | வாத்து | பிரமன் | தாய் |
| ii | மனை | பம்பரம் | அபயம் | இல்லம் | திகதி | பாய்ந்தான் |
| iii | சகாயம் | துகில் | சகோதரன் | மாமி | நான்முகன் | கங்கணம் |
| iv | புளிப்பு | வதுவை | தவழ்ந்து | தம்பி | ஆழி | கம்பன் |
| v | தந்தை | நங்கை | இளை | வதந்தி | பாட்டி | ஆர்வலர் |
| vi | குயில் | மதி | மாமன் | சுறுசுறுப்பு | குரங்கு | கோதை |

*அட்டவணையில் உள்ளடக்கப்பட்டுள்ள முப்பத்தாறு சொற களும் பின்வரும் தொகுதிகளாக வகைப்படுத்தப்படலாம்.*

A - ஒரேகருத்தைக் கொண்ட சொற்கள்.
B - ஒரு எழுத்தில் தொடங்கி அதேஎழுத்தில் முடியும் சொற்கள்.
C - சொல் நடுவில் வெளிப்படையாக இரு மெய் எழுத்துக்கள் அடுத்து வரும் சொற்கள்.
D - முதலாம் இடத்திலும், மூன்றாம் இடத்திலும் ஒரே எழுத்தைக் கொண்ட சொற்கள்.
E - பறவைகள் குறிக்கும் சொற்கள்.
F. - இரண்டாம் இடத்திலும், இறுதியிலும் ஒரே எழுத்தைக் கொண்ட சொற்கள் .
G - ஒரு சொல்லின் முதலாம் எழுத்து, இன்னுமொரு சொல்லின் இரண்டாம் எழுத்தாக அமையும் சொற்கள்.
H - பெண்பாற் சொற்கள்.
I - ஆண்பாற் சொற்கள்.
J - வேறுபட்ட கருத்தைத் தரும் சொற்கள்.
L - முதலாம் எழுத்து நீக்கப்பட்டால், வேறு கருத்தைத் தரும் சொற்கள்.

இச்சொற்கூட்டங்களை இனங்கண்டு, ப'ன்வரும் வினாக்களுக்கு விடை தருக.

01) A,B,H,J எனும் தொகுதிகளைச் சேர்ந்த சொற்களைக் கொண்ட நிரல் எது
(1) அ (2) ஆ (3) இ (4) ஈ

02) C,F,I,J,K எனும் தொகுதிகளைச் சேர்ந்த சொற்களைக் கொண்ட நிரை எது?
(1) ஆ (2) இ (3) ஈ (4) உ

03) F,H,I,J,K எனும் தொகுதிகளைச் சேர்ந்த சொற்களைக் கொண்ட நிரை எது?
(1) I (2) II (3) III (4) IV

04) C,D,G,H,J எனும் தெகுதிகளைச் சேர்ந்த சொற்களைக் கொண்ட நிரல் எது?
(1) ஆ (2) இ (3) ஈ (4) உ

05) பின்வருவனவற்றுள் எது G இல் குறிப்பிட்ட சொற்களைக் கொண்டுள்ளது?
(1) அபயம், துகில், கம்பம், கோதை
(2) கிளை, சகாயம், மதி, மாமன்
(3) தவழ்ந்து, கிளை, வதந்தி, கோதை
(4) திகதி, பிரமன், மதி, தவழ்ந்து

✷ 06 தொடக்கம் 10 வரையுள்ள வினாக்கள் ஒவ் வொன்றும் தொடக்கத்தில் இருக்கும் சோடிச் சொற்களுக்கி டையேயுள்ள தொடர்புடைமையை ஒத்த தொடர்புடை மையுள்ள சோடியைக் கீழே இருக்கும் சோடிகளில் இருந்து தெரிந்தெடுக்க.

06) எரிபொருள் : நெருப்பு
(1) குளிர்:வெப்பம் (2) உணவு: மனிதன்
(3) வெட்டுமரம்:மரம் (4) புகை: நிலக்கரி

07) மரம்:பட்டை
(1) நீர்: குழாய் (2) பாதுகாப்பு: வீடு
(3) செம்மறியாடு: கம்பளி (4) மின்சக்தி: மின்கலம்

08) கத்தி: வெட்டு
(1) பயணம்: கார் (2) சத்தம்: வெடி
(3) ஓவியம்: பென்சில் (4) ஆணி: துளை

09) கிணறு: நீர்
(1) கப்பல்: கடல் (2) பூ: மரம்
(3) விளக்கு: ஒளி (4) தேன்: தேனீ

(தொடரும்...)

**P.உமாசங்கர்**
**பிரபல ஆசிரியர்- பொதுஅறிவு நுண்ணறிவுத்துறை.**

---

## க.பொ.த. (சாதாரண தர) பரீட்சை – 2003

## விஞ்ஞானமும் தொழிநுட்பவியலும்

(சென்றவாரத் தொடர்ச்சி...)

(37) பூக்கும் தாவரங்களின் இலிங்கமுறை இனப்பெருக்கத்தில் கருக்கட்டற்செயன்முறையின் போது நடைபெறுவது.

1.பூவின் குறியின் மீது மகரந்த மணிகள் விழுதல்.
2.குறியின் மீது விழுந்த மகரந்த மணிகள் முளைத்தல்..
3.வளர்ச்சியடைந்த மகரந்தக் குழாய் முளையப்பையினுள் புகுதல்.
4.ஆண்கரு பெண்கருவுடன் இணைதல்.

(38) பாயும் நீரில் இருக்கும் சக்தி எது?

1. இயக்கப்பாட்டுச் சக்தி
2. அழுத்த சக்தி
3. மின்சக்தி
4. வெப்பசக்தி

(39) கூர்ப்புக் கொள்கையின் தந்தை என அழைக்கப்படும் விஞ்ஞானி யார்?

1. மெண்டல் 2. லீனியஸ்
3. நியூற்றன் 4. டாவின்

(40) விஞ்ஞானமுறை பற்றிய இரு கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A - விஞ்ஞானப் பரிசோதனைகளில் அவதானிப்புக்களைச் சுருக்கமாகவும், திருத்தமாகவும் பதிவு செயது வைத்திருத்தல் அவசியம்.

B - விஞ்ஞானத்தின் நோக்கம் யாதாயினும் ஒரு விடயம் அல்லது நிகழ்ச்சி பற்றிய உண்மையான நிலையைக் கண்டுகொள்வதாகும்.

1. A உண்மை, B உண்மையற்றது.
2. இரு கூற்றுகளும் பொய்யானது.
3. A உண்மையற்றது, B உண்மையானது.
4. இரு கூற்றுகளும் உண்மையானது.

(முற்றும்)

**எஸ்.பாலச்சந்திரன்**

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

### சிந்தனைக்கு

உள்ஒற்றி உள்ளூர் நகப்படுவர் எஞ்ஞான்றும்
கள்ஒற்றிக் கண்சாய் பவர்.

- *திருக்குறள்.*

# நமது நோக்கு

## போதைக்குள் புதையலாமா?

யாழ். குடாநாட்டில் இளைஞர்களிடையே மற்றவர்களைத் துன்புறுத்தி இன்பம் காணும் அடாவடித்தனமான கலாசாரம் வேகமாகவும் ஆழமாகவும் பரவியிருப்பதை அண்மைக்காலமாக வெகுவாகவே அவதானிக்க முடிகிறது.

கட்டற்ற தன்மையிலும் - மதுபோதையிலும் உலாவரும் இளைஞர் குழுக்களின் இத்தகைய செயல்கள் பகல், இரவு என்ற வேறுபாடின்றி அரங்கேறி வருகின்றன.

குறிப்பாக - மாலை நேரத்திற்குப் பின்னர் - குடாநாட்டில் இன்று சந்திக்குச் சந்தி திறந்து வைக்கப்பட்டிருக்கும் மதுபானசாலைகளிலும், ரெஸ்ரோரண்ட்களிலும் மது வகைகளை அருந்திவிட்டு - தலைகால் புரியாமல், வம்புகளை வளர்க்கும் இளைஞர்களின் அட்டகாசம் பற்றி அவசியம் குறிப்பிட்டே ஆகவேண்டியிருக்கிறது.

யாழ். குடாநாடு இராணுவக் கட்டுப்பாட்டில் வந்ததன் பின்னர் - மதுபானங்களைப் பெறுவதென்பது திட்டமிட்டு ஊக்குவிக்கப்பட்ட செயற்பாடாக இலகுபடுத்தப்பட்டதன் பின்னர் -

மேற்கிலிருந்து புலம்பெயர்ந்த தமிழர்கள் கணக்கிடாமல் வழங்கும் டொலர்களும், சமூக ஒழுங்கமைப்புச் சீர்குலைக்கப்படும்போது - அதனைத் தட்டிக் கேட்கக் கூடிய அதிகாரசக்தியெதுவும் முறையாகச் செயற்படாததும் - யாழ். இளைஞர்களின் குறிப்பிடத்தக்க வீதத்தினரை மதுபோதைக் கலாசாரத்திற்கு அடிமையாக வைத்தது.

வேலையற்று வெட்டியாகத் திரியும் இளைஞர்கள் என்று மட்டுமல்ல - பல்கலைக்கழக மாணவர்கள், உயர்தர வகுப்பு மாணவர்கள் - ஏன், சில சமயங்களில் சாதாரண தரம் பயிலும் மாணவர்கள் சிலரும் கூட - திறந்த வெளி மதுபானசாலைகளுக்கு வந்துசெல்வதைத் தாம் காண்பதாக பலரும் வேதனையுடன் குறிப்பிடுகின்றனர்.

மது அருந்துவதை - தமக்கான கௌரவமாகவும், அதனை ஒரு சீர்மிக்க பொழுதுபோக்காகவும் எண்ணி - தமது வாழ்வை அது சீரழிப்பதை உணராமல் - மதுபான சாலைகளில் குவியும் இளைஞர்களை இன்று குடாநாட்டில் வெகு சாதாரணமாகவே காணமுடிகிறது.

மது அருந்தியபின் - தாம் என்னதான் செய்கின்றோம் என்ற உணர்வு கிஞ்சித்தும் இல்லாமல் - அறிவை மயக்கும் போதை ஒரு புறம், தமிழ்த் திரைப்படங்கள் தரும் அரைவேக்காட்டு ஹீரோயிசங்கள் மறுபுறமாக - வீதிகளில் இந்த இளைஞர்கள் - சேஷ்டைகள் புரிதலிலும், மக்களைத் துன்புறுத்தலிலும் - வெகு ஆர்வமாக ஈடுபடுகின்றனர்.

இவ்வாறான இளைஞர் குழுக்களின் அடாவடித்தனங்களும், முறைகெட்ட செயற்பாடுகளும் அண்மைக்காலமாக கலாசாரத்தைப் பேணும் குழுக்களால் அடக்கப்பட்டிருந்தாலும் - இந்த ரௌடித்தனங்கள் முற்றாக அருகிவிட்டதாகக் கூற முடியாத நிலையே நிலவுகின்றது.

உதாரணமாக - கடந்த ஞாயிறன்று இரவும் கூட - யாழ். நகரப் பகுதியில் இரவுக் கடமைக்கு நின்ற பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் - மதுபோதையில் வந்த இளைஞர் குழுவொன்றால் - போத்தலால் தாக்கப்பட்டு படுகாயமடைந்தார்.

இது மிக அண்மையில் நடந்த, வெளித்தெரிய வந்த சம்பவமொன்றே. இதனைவிட - இரவு வேளைகளில் மதுபோதையில் வீதிகளில் குழுமிக் கூக்குரலிட்டும், வீடுகளுக்குக் கல்லெறிந்தும் அடாவடித்தனம் புரியும் சம்பவங்கள் பலவும் தினமும் நடந்தே வருகின்றன.

உலகமயமாதலின் வலைக்குள் மிக வேகமாகச் சிக்குண்டிருக்கும் யாழ். குடாநாட்டில், இந்தப் போக்கு - இளைஞர்களிடையே வேகமாகப் பரவும் நோயெனவே பாதித்திருப்பதைப் பலரும் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்தச் சமூக நோயை உடனடியாகவே குணப்படுத்தி, கட்டற்றுப்போகும் இளம் சமுதாயத்தை நல்வழிக்குக் கொண்டுவரும் பொறுப்பு அனைவருக்குமே உள்ளது.

தனியே கலாசாரத்தைப் பேணும் குழுக்களால் மட்டுமே இதனைச் சாதிக்கமுடியாது. பெற்றோர், தம் பிள்ளைகள் இவ்வாறான பாதிப்புக்குள்ளாகின்றனரா என்பதைத் தீவிரமாகக் கண்காணிக்கவேண்டும். பாடசாலைகளும், பல்கலைக்கழகங்களும் - இது தொடர்பில் தம்மாலியன்ற விழிப்புணர்வைத் தர முன்வரவேண்டும்

வர்த்தக நோக்கத்திற்காக என்று கூறிக்கொண்டு - இளைய சமுதாயத்தையே பெருமளவில் கருவறுக்கக்கூடிய, தீய வழிகளில் மூழ்கடிக்கக் கூடிய மதுபோதைக் கலாசாரத்தை ஊக்குவிப்பதை - மதுபோதை விற்பனையாளர்களும், ரெஸ்ரோரண்ட் உரிமையாளர்களும் தவிர்க்கவேண்டும். இளைஞர்களை - தமது மதுபானசாலைகளுக்குள் அனுமதிப்பதில் கட்டுப்பாடுகளை விதித்து- சமூகநல நோக்கில் செயற்பட இவர்கள் முன்வரவேண்டும்.

இவ்வாறு - சமூகத்திலுள்ள அனைவரும் ஒத்திசைந்து செயற்படத் தவறும் பட்சத்தில் - மதுபோதைக் கலாசாரத்தினுள் எமது சமூகத்தின் பண்பாடும், கலாசாரமும் - ஒழுக்கவியலும் மிக வேகமாக மூழ்கடிக்கப்படும் அபாயமே தோன்றும்.

### வன்னிப் பகுதியில்

# கோழி கூவி பொழுதுகள் விடிவதில்லை கிபிர் விமான இரைச்சலுடன்தான் விடிந்தது!

### "புலிகளின் குரல்" சிறப்பு நிகழ்ச்சியில் புதுவை அன்பன்

விடுதலைப்புலிகளுக்கு எவ்வாறு ஒரு வரலாறு இருக்கின்றதோ, அதேபோன்ற ஒரு வரலாறு 'புலிகளின் குரல்' நிறுவனத்துக்கும் உண்டு. வன்னியிலே கோழிகூவி பொழுது விடிவதில்லை, கிபிர் விமானங்களின் இரைச்சலுடன்தான் விடியும். செத்தவீடு கொண்டாடுவதே எங்களது வாழ்வாகி இருந்தது. அந்த துயரத்துக்கு மத்தியிலேதான் கலைப்பணி தொடர்ந்தது.

-இவ்வாறு நேற்று முன்தினம் யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற மூத்தகலைஞரும், நாட்டுப்பற்றாளருமான வி.ரி.ஏ விஸ்வாவின் நினைவாகப் 'புலிகளின் குரல்' நிறுவனம் நடாத்திய சிறப்பு முத்தமிழ் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய கலைபண்பாட்டுக் கழகக் கலைஞரும். எழுத்தாளருமான புதுவை அன்பன் தெரிவித்தார்.

வன்னிப்பகுதியில் நாங்கள் வாழ்ந்தபோது எல்லா வாயில்களும் அடைக்கப்பட்டு, போருக்குள் நாங்கள் முடமாகிக் கிடந்தோம். போருக்குள் புதையுண்டு போன எங்கள் வாழ்வை போராடித்தான் பெறவேண்டும் என்ற ஒரு வரலாற்று நிர்ப்பந்தம் எங்கள் தலைமேல் சுமத்தப்பட்டது.

போராடினால்தான் வாழ்வு என்றாகிப்போனபோது, நாங்கள் வாழ்வுக்காகப் போராடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அங்கே எல்லா வளமும் போருக்கானது. போருக்கான படை பலத்தினைத் திரட்டவேண்டிய ஒரு வரலாற்றுத்தேவை கலைஞர்களாகிய எம்மீது சுமத்தப்பட்டது.

ஆயுதமேந்திப் போராடிய போராளிகள் - களத்திலே போராட, போராட்டத்துக்குத் தேவையான வலுவினைச் சேர்க்க கலைஞர்கள் புறப்பட்டனர் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## மன்னாரில் பிறந்த அதிசய பெண் சிசு

மன்னார் வைத்தியசாலையில் அதிசய பெண்சிசு ஒன்று நேற்றுமுன்தினம் பிறந்துள்ளது.

கைகள் இரண்டும் இல்லாதநிலையில், கால்கள் இரண்டும் சப்பாணி கட்டியநிலையில் இந்தக் குழந்தை பிறந்துள்ளது. தோள்மூட்டுப் பகுதியில் கைகளுக்குப் பதிலாக சிறுமுளைகள் போன்று காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. சிசுவினுடைய வலதுகாலில் நான்கு விரல்களும், இடதுகாலில் மூன்று விரல்களும் காணப்படுகின்றன.

மன்னார் நாழ்வுபாடு பகுதியைச் சேர்ந்த சத்தியசீலன் குரூஸ் - யூலிற் தம்பதிகளுக்கே இந்தக் குழந்தை பிறந்துள்ளது. இந்தச் சிசுவுக்குப் சப்திகா எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

சிசு ஆரோக்கியமாக இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (201)

## தமிழீழ சுகாதார சேவையின் பணிமனை மட்டக்களப்பில்!

மட்டக்களப்பு - அம்பாறை தமிழீழ சுகாதார சேவைகள் பணிமனை கடந்த சனிக்கிழமை மகிழடித்தீவில் திறந்துவைக்கப்பட்டது.

விடுதலைப்புலிகளின் மட்டு - அம்பாறை மாவட்ட சுகாதாரப் பிரிவு பொறுப்பாளர் எஸ்.செல்வக்குமார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், ஈகச்சுடரினை மாவீரர் ஒருவரின் தந்தையான வே.அருச்சுனன் ஏற்றினார்.

தமிழீழ சுகாதார சேவை பணிமனையின் பெயர்ப்பலகையினை மட்டு - அம்பாறை மருத்துவப் பொறுப்பாளர் டாக்டர். வாமணன் திரைநீக்கம் செய்துவைக்க, அலுவலகத்தை இராணுவ மருத்துவ ஆலோசகர் டாக்டர் திருமதி எழுமதி கரிகாலன் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் டாக்டர் வாமணன் உரைநிகழ்த்தும் போது - திறக்கப்பட்டுள்ள சுகாதார சேவைப் பணிமனை மூலம் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டத்திலுள்ள மக்களின் சுகாதார சேவை, மருத்துவச் செயற்பாடுகள் மேம்படுத்தி விஸ்தரிக்கப்படும். இதற்கு சுகாதாரத் திணைக்கள அதிகாரிகளும் எம்முடன் ஒத்துழைக்க வேண்டுமென்றார்.

தொடர்ந்து டாக்டர் திருமதி எழுமதி கரிகாலன் உரை நிகழ்த்துகையில் - தேசியத் தலைவரினால் 1993 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட தமிழீழ சுகாதார நிலையம் முதன்முதலாக மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டத்திற்கு விஸ்தரிக்கப்படுகின்றது. இதனைத் திறம்படச்செய்வதற்குச் சுகாதாரத்திணைக்கள அதிகாரிகள் எமக்குப் பூரண ஒத்துழைப்பு வழங்கவேண்டும் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட சுகாதாரத்திணைக்கள நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.கோபாலபிள்ளை உட்படப் பலர் உரைநிகழ்த்தினர்.

## புனர்வாழ்வுத் திட்டங்களை கண்காணிக்க செயலணிக்குழு

வட - கிழக்கில் நடைமுறைப்படுத்தப்படவிருக்கும் அனைத்து புனர்வாழ்வு நடவடிக்கைகளையும் கண்காணிப்பதற்கும், வழி நடத்துவதற்கும் புதிய செயலணி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

மேற்படி செயலணி, பிரதமரின் பணிப்பின்பேரில் உருவாக்கப்பட்டுள்ளது. இச்செயலணி, பிரதமரின் நேரடிக் கண்காணிப்பில் செயற்படுத்தப்படும் வகையில் அமைக்கப்பட்டிருக்கிறது.

வட - கிழக்கில் அமுல்செய்யப்படும் அனைத்துப் புனர்வாழ்வு செயற்றிட்டங்களும் உரியமுறையில் மேற்கொள்ளப்படுகின்றதா என்பதை மேற்படி செயலணி அனைத்து மட்டங்களிலும் கண்காணிக்கும்.

இவற்றைவிட, வட - கிழக்கில் மேற்கொள்ளப்படவிருக்கும் அனைத்துச் செயற்திட்டத்தையும் ஒருங்கிணைத்துச் செயற்படுத்துவதற்கு மேலும் ஒரு செயலணியும் அமைக்கப்பட்டுள்ளது. (க)

## சண்டி மல்லி படுகொலைக்கு அரசியற் பின்புலமே காரணம்

### எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ

தென்மாகாண சபை அமைச்சரான 'சண்டி மல்லி' எனப்படும் ரஞ்சித் கொல்லப்பட்டதற்கு அரசியற் பின்புலமே காரணம் என்று எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

கடந்த பொதுத் தேர்தல் கொலைகளின் தொடர்ச்சிதான் இது. தனிப்பட்ட கொலையல்ல.

உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் இப்படிப்பட்ட கொலைகள் நடக்குமேயானால் இந்த நாட்டில் சட்டம், ஒழுங்கு எவ்விதம் சாத்தியப்படும் எனச் சந்தேகம் எழுகிறது.

சண்டி மல்லியின் படுகொலைக்குப் பின்னால் சக்தி வாய்ந்த அரசியற் சக்தி உள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## சமாதான முயற்சிகளை மூட்டைகட்டிக்கொண்டு ஐக்கிய தேசியக் கட்சி அரசு புறப்படுவதே நல்லது!

### ஜே.வி.பியின் ரில்வின் சில்வா கூறுகிறார்

சுந்திரக்கட்சியுடன் 95 சதவீதமான இணக்கப்பாடு முடிவடைந்துவிட்டது. இனி, நாம் அமைக்கப்போகும் கூட்டணி ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தைத் தோற்கடிக்கும். அதற்கு முன் சமாதான முயற்சிகளை மூட்டை கட்டிக்கொண்டு ஐ.தே.க. அரசாங்கம், வீட்டுக்குப் புறப்படுவதே நல்லது என ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா கூறியுள்ளார்.

அவர் இது தொடர்பாக செய்தியாளர்கள் மத்தியில் பேசும் போது,

விடுதலைப் புலிகளுக்குத் தனியாக இடைக்கால நிர்வாகம் கொடுத்தால், நாட்டிலுள்ள ஏனைய ஆயுதக் குழுக்களும் தத்தமக்கென ஆட்சியுரிமை கேட்கும் என்றார்.

சுதந்திரக் கட்சியுடனான கூட்டணி அமைக்கப்படும்போது, நாம் பொதுச்செயலாளர் பதவியைக் கேட்கிறோம் என ஊடகங்கள் தகல்கள் வெளியிட்டுள்ளன. இது முற்றிலும் தவறானது. நாம் அப்படி எதனையும் கோரவில்லை எனவும் தெரிவித்தார் ரில்வின் சில்வா.

## சி.ஐ.டி. என அடையாளம் காட்டி தமிழ் வர்த்தகரிடம் கொள்ளை!

தம்மை இரகசியப் பொலிஸார் என அடையாளம் காட்டிய சிலர் - கேகாலையில் தமிழ் வர்த்தகர் ஒருவரைக் கடத்திச் சென்று, அவரிடமிருந்த மூன்று லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் மற்றும் பணத்தை கொள்ளையிட்டதுடன், அவரையும் தாக்கிப் படுகாயப்படுத்தினர்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

பிரிட்டனில் இருந்து அண்மையில் வந்திருந்த வர்த்தகரான மயில்வாகனம் மகாதேவன் என்பவரது வீட்டுக்குக் கடந்த 24 ஆம் திகதி இரவு சிலர் சென்றனர்.

இவர்கள் தம்மை சி.ஐ.டியினர் எனக் கூறியதுடன், போலியான அடையாள அட்டைகளையும் காட்டினர்.

சர்வதேச பொலிசாருக்காக வாக்குமூலம் ஒன்றைப்பெற வேண்டும் எனக்கூறி அக்குழுவினர் தமிழ் வர்த்தகரை வான் ஒன்றில் கடத்திச் சென்றனர்.

கொழும்புப் பொலிஸ் தலைமையகத்திலிருந்தே இந்த உத்தரவு விடுக்கப்பட்டதாக அவர்கள் தெரிவித்திருந்தனர்.

வர்த்தகரைக் கடத்திச்சென்ற குழுவினர், அவர் அணிந்திருந்த தங்கநகைகள் மற்றும் பணம் என்பவற்றை அபகரித்ததுடன், அவரைத் தாக்கிப் படுகாயப்படுத்திவிட்டு ஓரிடத்தில் இறக்கிவிட்டுச் சென்றுள்ளனர்.

# முகாமைத்துவ நுட்பங்களை புரிந்துகொள்ளாதவர் சிறந்த முகாமையாளராகத் தோன்ற முடியாது!

**யாழ்.பல்கலைக்கழக முகாமைக் கற்கைகள், வணிகபீடத்தின் பீடாதிபதி நடராஜசுந்தரத்துடனான நேர்காணல்.**



நடராஜசுந்தரம்

**கேள்வி:-** முகாமைத்துவம் என்பது தனியே கல்வித்துறை சார்ந்த ஒரு விடயமா? அல்லது வேறு துறைகளிலும் முகாமைத்துவம் சம்பந்தமான கருத்துக்கள் பேணப்பட்டு வருகின்றனவா?

**பதில்:-** முகாமைத்துவம் என்பது எந்தவொரு செயற்பாட்டையும் எவ்வாறு மேற்கொள்வது என்பதனை விளக்குவதொன்றாகும். இது உலகரீதியாக இன்று ஒரு முதன்மை விஞ்ஞானமாகக் கருதப்பட்டுவருகின்றது. முகாமைத்துவம் என்ற எண்ணக்கரு ஆரம்பகாலங்களிலிருந்து இராணுவ ஒழுங்குமுறைகளிலும், கத்தோலிக்க சமய ஒழுங்கு அமைப்பிலும் பேணப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது.

நீண்டதொரு பரிணாம வளர்ச்சியில் காலத்துக்குக்காலம் தங்களுடைய சூழலுக்கேற்ப முகாமைத்துவக் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் மாக்ரெயிலர், கென்றி பயோல், அண்மைக்காலங்களில் பீற்றர் றகர் போன்றோர் விரிவுபடுத்தி வந்துள்ளமையைக் காணலாம். உலகரீதியாக மூலவளங்களில் ஏற்பட்ட பற்றாக்குறை - குறிப்பாக மூலப்பொருட்கள், இயந்திரங்கள், மனிதவளம், நிதி என்பன முகாமைத்துவச் செயற்பாட்டில் ஒரு புதிய அணுகுமுறையை உருவாக்கின.

வளங்கள் பற்றாக்குறையாக இருக்கும்பொழுது அவற்றைப் பயன்படுத்துவதில் முகாமைத்துவ எண்ணக்கருக்களான திட்டமிடல், ஒழுங்கமைத்தல், தீர்மானம் எடுத்தல், வழிநடத்தல், மனிதவள ஒழுங்குகள் இடம்பெறுகின்றன.

இவையாவும் தனியாகக் கல்வி சார்ந்த விடயம் என்று மட்டும் கொள்ளமுடியாது. எல்லாத்துறைகளிலும் அந்தந்தத் துறைகளுக்கேற்றவாறு இந்தத் தத்துவங்கள் விளக்கப்படுகின்றன. முகாமை என்பது பல்துறை ஒழுங்கு எனவும் கூறப்படுகின்றது. பிரபல எழுத்தாளர்களும் - நிறுவனங்களில் உயர் அதிகாரிகளாக இருந்த தமது அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டே நூல்களை வெளியிட்டுள்ளனர்.

இதனைக் கற்பிப்பவர்கள் நிறைந்த தொழில் அனுபவம் கொண்டிருக்க வேண்டும். இன்று எல்லாத்துறைகளில் இருப்பவர்களும் டாக்டர், பொறியியலாளர் ஏனைய உயர் அதிகாரிகள் - முகாமைத்துவத்தில் ஒரு பட்டப்பின் படிப்பைப் பெறவேண்டிய சூழலில் இருப்பதை நாம் கண்டு கொள்ளக்கூடியதாக இருக்கின்றது.

**கேள்வி:-** யாழ்.குடாநாட்டைப் பொறுத்தவரையில் முகாமைத்துவக் கற்கைகள் என்பது வெறும் ஏட்டுக் கல்வியாகவே இருந்து வருவதோடு, செய்முறையுடன்கூடிய கல்வி முறைமை இல்லாமலிருப்பது குறித்து உங்களுடைய கருத்து என்ன?

**பதில்:-** மாணவர்கள் மத்தியில் இத்தகைய பிழையான எண்ணம் இருந்துவருவது கவலைக்குரியது. முகாமைத்துவக் கற்கைகள, வணிக பீடத்திற்கு வரும் மாணவர்கள் உயர்தரப் பரீட்சையில் அதிகளவு புள்ளிகளைப் பெற்றுவருகின்றனர். நான்கு வருடங்கள் படித்தபின்தான் முழுமையான பட்டத்தைப் பெறுகின்றார்கள்.

இலங்கையில் எந்தவொரு பல்கலைக்கழகத்திலும் செய்முறையுடன் இணைந்த கல்விமுறை காணப்படுவதில்லை. கணக்கியல் படிக்கும் மாணவர்களுக்கு சில பல்கலைக் கழகங்களில் இத்தகைய செய்முறைப் பயிற்சி சில நிறுவனங்களின் மூலம் வழங்கப்படுகின்றது. மாணவர்கள் முதலில் முழுமையான ஒரு அறிவினைப பெறவேண்டும். முகாமைத்துவ நுட்பங்களை முதலில் புரிந்து, விளங்கிக்கொள்ள வேண்டும். அதனைச் சிறப்பாகப் படித்துத் தேர்ச்சிபெறாத மாணவர்கள் எந்தவகையிலும் சிறந்த முகாமையாளர்களாக, நிர்வாகிகளாகத் தோன்றமுடியாது.

தற்போதைய பரீட்சை முறைகள, தொடர்ச்சியான பரீட்சைமுறைகளாக அமைவதாலும், முழுமையாகப் பயிற்சிபெற நிறுவன அமைப்புக்கள் இடங்கொடுக்காமையும், செய்முறைக்கல்வியை ஊக்குவிப்பதற்குத் தடங்கலாக அமைகின்றன.

சிறந்த முறையில் கல்வியை மேற்கொண்டு அறிவை வளர்க்கும் ஒருவருக்கு, எந்தவொரு நிறுவனத்தில் வேலை செய்யும்பொழுது, செய்முறைப் பயிற்சியில்லை என்பது ஒரு தடங்கலாக அமையாது. இது மாணவர்கள் மத்தியில் ஒரு மன உளைச்சலை ஏற்படுத்தி இருக்கின்றதேதவிர, அதனால் நீங்கள் நினைப்பதுபோல பெரிய மாற்றங்கள் உருவாகுவதற்கில்லை.

கேள்வி:- 21 ஆம் நூற்றாண்டில் தகவல் தொழில்நுட்பம் (INFORMATION TECHNOLOGY) என்பது முகாமைத்துவத்தின் உயிர்நாடி என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்கின்றீர்களா?




**பதில்:-** 21 ஆம் நூற்றாண்டில் நாம் எதிர்நோக்கும் சவால்களில் முக்கியமானது தகவல் தொடர்பு தொழில்நுட்பமாகும். தகவல் தொழில நுட்ப நிலை மாற்றமடைந்து தகவல் தொடர்பு தொழில்நுட்பம் (INFORMATION COMMUNICATION TECHNOLOGY) வேகமாக வளர்ச்சியடைந்துவருகின்றது. இன்று இயந்திர காலத்திலிருந்து (MECHINE AGE) தகவல காலத்திற்கு (INFORMATION AGE) மாறி வருகின்றோம். இதனை DIGITAL AGE எனவும் கூறுவர். மனிதனின் நாளாந்தச் செயற்பாடுகள் எல்லாவற்றிலும் இதனுடைய யதார்த்தத்தைக் காணமுடிகின்றது. மனித செயற்பாடுகளில் மாற்றம், அறிவை விருத்திசெய்ய வேண்டிய காலம், அறிவு சார்ந்த முகாமைத்துவம் (KNOWLEDGE MANAGEMENT) உருவாகின்றது.

பணத்தைவிட அறிவுக்கு முக்கிய இடங்கொடுக்கின்ற நூற்றாண்டாக இருக்கின்றது. அறிவு சார்ந்த முகாமைத்துவத்தில், நிறுவன மூலதனத்தில் பணத்தின் அளவைவிட, அறிவு சார்ந்தவர்களின் மூலதனம் (INTERLECTUAL CAPITAL) முக்கிய இடத்தை வகிக்கின்றது. முகாமைத்துவத்தின் செயற்பாட்டில் மாற்றங்கள் உருவாகின்றன.

ஒரு சிந்தனையை எவ்வாறு பொருளாக மாற்றலாம் (TRANSLATE AN IDEA INTO A PRODUCT) என இவையாவுமே முகாமைத்துவத்தில் அறிவின் முக்கியத்துவத்தையும், பாதிப்பையும் எடுத்துக்காட்டுகின்றன.

முகாமைத்துவம் பல நீண்டகாலமாக வளர்ச்சியடைந்து வருவதொன்று. அது சிக்கனமாகவும் (ECONOMY), திறனுடையதாகவும் (EFFICIENCY), பயனுறுதி உடையதாகவும் இயங்குவதற்குத் தகவல் தொழில்நுட்பம் பக்கச்சார்பாக உதவிபுரியுமே தவிர, அது முகாமைத்துவத்தின் உயிர் நாடி அல்ல. இரண்டும் வெவ்வேறு அம்சங்களாகும். முகாமைத்துவம் பெருமளவுககு நடத்தை சம்பந்தமான அம்சங்களை உள்ளடக்கிய தாகவே காணப்படும்.

**கேள்வி:-** முகாமைத்துவத்தினுடைய வளங்களில் ஒன்றாக நேரமுமதற்போது கருதப்பட்டு வருகின்றது. இந்த நேரமுகாமை (TIME MANAGEMENT) என்பது நம்நாட்டில் எந்தளவில் பேணப்பட்டு வருகின்றது?

**பதில்:-** நேரமுகாமைத்துவம் பொறுப்புவாய்ந்த முறையில் இயங்காதவிடத்து, முகாமைத்துவ நன்மை முழுவதையும் நீங்கள் பெறமுடியாமலிருக்கும். பீற்றர் றகர் உடைய கருத்தினை அவர் எழுதிய **'THE EFFECTIVE EXECUTIVE'** என்னும் நூலில், சிறப்பான முறையில் முழுக் கடமையையும் செய்து முடிப்பவர்கள் - தமது வேலையினைக் குறிக்கப்பட்ட நேரத்தில் ஆரம்பிப்பதில் கவனமாக இருக்கின்றார்கள் எனக் குறிப்பிட்டுள்ளார்.

முகாமைத்துவத்தில் இந்த ஒரேயொரு வளம், மீண்டும் திரும்பப்பெற முடியாது. ஆகையால் நேரத்தை மிகவும் கவனமாகவும், பயனுறுதியுடையதாகவும் பயன்படுத்த வேண்டும். ஒரு வளர்ச்சியடைந்த நாட்டில் தொழில்நுட்ப முன்னேற்றங்கள் காணப்படுவதனால் எல்லோரும் நேர முகாமைத்துவத்தைப் பேணவேண்டும் என்பதில் மாற்றமிருக்காது. ஜப்பான் நாட்டில் ரயில் ஓடுவதைக் கொண்டு நேரம் கணிப்பார்கள்.

மூன்று நிமிடம் ரயில் பிந்திச் சென்றதற்காக ஒரு சாரதி தற்கொலை புரிந்த சம்பவம் ஜப்பானில் உண்டு. வேலைகள் யாவும் தொடர்ச்சியாகக் கணினிகளுடன் இணைக்கப்பட்டிருக்கும் பொழுது, ஒருவரும் நேரம் பிந்தாமல், வேலைக்கு வரவேணடும். எமது நாட்டைப் பொறுத்தவரை- நேரம் என்பது தனியார்துறைகளில் கவனத்தில் எடுக்கப்படுகின்றது. பகிரங்கத்துறையில் பெருமளவுக்குப் புறக்கணிக்கப்படுகின்றது.

***நேர்காணல்: பஞ்சரத்தினம்***

---

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில்

# மீள் குடியமர்வுக்கான கொடுப்பனவு 504 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டது!

(பண்டத்தரிப்பு)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் மீள்குடியமர்ந்த குடும்பங்களுக்கான 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவு- இதுவரையில் 504 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக, பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எம்.பாலசிங்கம் தெரிவித்தார்.

வலிகாமம் தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள 16 கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த குடும்பங்களுக்கே இந்தக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி கிராம சேவையாளர் பிரிவுகளிலிருந்து கிடைத்த விண்ணப்பங்களில், முன்னுரிமை அடிப்படையில் இக்கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது என்றும், இன்னும் 5 கிராம சேவையாளர் பிரிவுகளிலிருந்து விண்ணப்பித்தவர்களுக்கும் விரைவில் கொடுப்பனவை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

ஏ-9 பாதை திறக்கப்பட்டதைத் தொடர்ந்து வன்னிப் பிரதேசத்திலிருந்து வந்து, இப்பிரதேச எல்லையில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவுகள் உலக வங்கி நிதியுதவித்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு வருகின்றன.

மீளக்குடியமர்ந்த குடும்பங்களில் அடையாள அட்டைகளை இழந்தவர்கள், தொலைத்தவர்கள் போன்றோருக்கும் இக்கொடுப்பனவுகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




சத்திதாசனின் 'நெஞ்சை நெருடல்' கவிதைத் தொகுதி வெளியீட்டு விழாவில் -அருட்கவி வினாசித்தம்பி, கவிஞர் சத்திதாசனுக்கு 'வரகவி' பட்டம் வழங்கிக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம். (88)

## மாவட்ட மீளாய்வு சபைக் கூட்டம்

யூ.என்.எச்.சி.ஆர் இன் மாவட்ட மீளாய்வுச்சபைக் கூட்டம் நாளை யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுவரும், மற்றும் இனிமேல் நடைமுறைப்படுத்தப் படவுள்ள திட்டங்கள் பற்றி ஆராயப்படவுள்ளதுடன், புதிய நியமனங்கள் பற்றியும் கலந்துரையாடவுள்ளனர்.

## வலைப்பந்தாட்டப் போட்டி

வட - கிழக்கு மாகாண ரீதியிலான வலைப்பந்தாட்ட போட்டி எதிர்வரும் சனி,ஞாயிறு ஆகிய இரு தினங்களிலும் ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. ஆண்,பெண் இருபாலாரும் பங்குபற்றும் இப்போட்டியில், 8 மாவட்டங்களைச் சேர்ந்த வீர,வீராங்கனைகள் பங்குபற்றவுள்ளதாகத் தெரியவருகின்றது.

---

பேராதனைப் பல்கலைக்கழக

# தமிழ்ச்சங்கத்தின் ஏற்பாட்டில் கவிதை, கட்டுரைப் போட்டிகள்

பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள பவளவிழாவை முன்னிட்டு, பாடசாலை மாணவர்களிடையே இலக்கியப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

தரம் பதினொன்றிற்கு உட்பட்டவர்கள் கீழ்ப்பிரிவாகவும், உயர்தர மாணவர்கள் மேற்பிரிவாகவும் வகைப்படுத்தப்பட்டுக் கட்டுரை, கவிதை, சிறுகதை ஆகிய போட்டிகள் நடாத்தப்படவுள்ளன.

போட்டியில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள், தாம் விரும்பிய கருப்பொருளில் இரண்டு பக்கங்களுக்கு உட்பட்ட கவிதையையும், ஐந்து பக்கங்களுக்கு மேற்படாமல் சிறுகதையையும், கீழ்பிரிவு மாணவர்கள் "ஊருக்கு உழைத்திட யோகம்" என்ற தலைப்பில் 400 சொற்களைக் கொண்ட கட்டுரையையும், மேற்பிரிவு மாணவர்கள் "பாடசாலைகளில் அறக்கல்வியின் அவசியம்" பற்றிய 800 சொற்களைக் கொண்ட கட்டுரையையும் எழுதி - தமது சுய விபரங்களுடன் அதிபரால் உறுதிப்படுத்தப்பட்ட ஆக்கங்களை, எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்ச சங்கத்திற்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

ஒருவர் எத்தனை போட்டிகளிலும் பங்குபற்றலாம். ஆக்கங்கள் சுயமாகத் தயாரிக்கப்பட்டதாகவும், இது வரை வேறு எந்தப் போட்டிகளுக்கும் அனுப்பப்படாததாகவும் இருக்கவேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# மிதிவெடி விழிப்புணர்வுத்திட்டம் வெண்புறாவினால் நடைமுறைக்கு!

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலயப் பாடசாலை மாணவர்களுக்கும், கிராம அலுவலக பிரிவுரீதியாக பொதுமக்களுக்கும் வெண்புறா நிறுவனம் கண்வெடி அபாயக்கல்வித்திட்டத்தையும், விழிப்புணர்வு நிகழ்ச்சிகளையும் மேற்கொண்டுவருகிறது.

தற்போது கொழும்புத்துறை, அரியாலை கிராம அலுவலர் பிரிவுகளிலுள்ள மக்களுக்கு இந்த மிதிவெடி விழிப்புணர்வுத்திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. தொடர்ந்து ஏனைய மிதிவெடி அபாயமுள்ள பகுதிகளுக்கும் இந்த நிகழ்ச்சித் திட்டம் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படவுள்ளது.

அத்துடன், சர்வதேச நிதி நிறுவனங்களின் உதவியுடன், ஊனமுற்றவர்களுக்கான வேலை ஊக்குவிப்புத் தொழில்முயற்சியும் விரைவில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இவர்கள் தொடர்பான விபரங்கள் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுரீதியாகத் திரட்டப்பட்டுவருகின்றன. (ரா)



‘சார்ஸ்’ தாக்கம் குறைந்துவிட்டதாகச் சீன அரசு கூறினாலும் - மக்களிடையே அச்சம் தணியவில்லை என்பதற்கு இந்தக் குழந்தையும் ஒரு சாட்சி.

# அமெரிக்கர் மீதான தாக்குதல் பக்தாத்தில் திடீரென அதிகரிப்பு!

ஈராக் தலைநகர் பக்தாத்தில் - அமெரிக்கப் படையினர் மீதான தாக்குதல், திடீரென அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

பக்தாத்திலிருந்து - 30 கிலோமீற்றர் தொலைவிலுள்ள, பாலூஜா என்ற நகரில், நேற்று ஈராக்கிய கிளர்ச்சியாளர்கள் நடத்திய ரொக்கட் தாக்குதலில் - ஓர் அமெரிக்கச் சிப்பாய் பலியானார். மேலும் 7 பேர் காயமடைந்தனர். பள்ளிவாசல் ஒன்றிலிருந்து இந்த ஏவுகணை செலுத்தப்பட்டதாக, அமெரிக்க அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். அமெரிக்கப் படைகள் திருப்பித் தாக்கியதில் - கிளர்ச்சியாளர்கள் இருவர் பலியானதாகவும், ஆறுபேர் கைதானதாகவும் அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர். இச்சம்பவத்தில் காயமடைந்த படையினரை ஏற்றுவதற்காக, இப்பகுதியில் தரையிறங்கிய ஹெலிகொப்ரருடன் அமெரிக்க கவசவாகனம் ஒன்றும் மோதுண்டு விபத்துக்குள்ளானது.

கடந்த திங்களன்றும் - ஹபீதா என்ற நகரில், ரோந்து சென்ற அமெரிக்கப் படையணி ஒன்றின் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில், ஒரு அமெரிக்கச் சிப்பாய் பலியானார். மற்றுமோர் சம்பவத்தில் - பக்தாத் அருகே நடந்த கண்ணி வெடித் தாக்குதலில், ஒரு அமெரிக்கச் சிப்பாய் பலியானார். மேலும் மூவர் காயமடைந்தனர்.

வடபக்தாத்திலுள்ள அமெரிக்கப் படை சோதனை நிலை ஒன்றின்மீது - கிரனேட் வீசப்பட்டபோதும் சேதம் ஏதும் ஏற்படவில்லை. கிரனேட்டை கையில் எடுத்துவந்ததாகக் கூறி, ஈராக்கியப் பெண்மணி ஒருவரை, இப் பகுதியில் அமெரிக்கப் படையினர் கடந்தவாரம் சுட்டுக்கொண்றனர்.



அமெரிக்காவிற்கு நித்திய கண்டம்!

சதாமின் சொந்த இடமான திக்ரிட்டில் உள்ள அமெரிக்கப் படை முகாம் மீது, நேற்றுமுன்தினம் ரொக்கட் தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டபோதிலும் - அது வெடிக்காமையினால் சேதம் ஏற்படவில்லை.

## போர் நடக்கும் ‘அசே’ மாகாணத்திலிருந்து

# தொண்டர் அமைப்புக்களை வெளியேற இந்தோனேஷிய அரசாங்கம் உத்தரவு!



‘அசே’ மாகாணத்தில் செயற்படும் தொண்டர் உதவி அமைப்புக்கள் - தமது பணிகளை இடைநிறுத்திக் கொள்ளவேண்டும் என, இந்தோனேஷிய அரசு அறிவித்துள்ளது. அரசின் இந்தப் பணிப்பை ஏற்கவேண்டியிருப்பதாக, அங்குள்ள ஐ.நா அலுவலக இணைப்பாளர் தெரிவித்தார்.

தற்போது, உதவிப்பணிகளை உள்ளூர் இந்தோனேஷிய செஞ்சிலுவைச்சங்கமே மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. கடந்த ஒன்பது நாட்களாக ‘அசே’ மாகாணத்தில், போராளிகளுக்கு எதிராக இந்தோனேஷியப் படைகள் நடத்திவரும் தாக்குதல்களினால், பொதுமக்கள் நிலைமை மோசமடைவதாக வெளிநாட்டு உதவி அமைப்புக்கள் எச்சரித்துள்ளன.

இதேவேளை, ‘அசே’ போராளிகளின் பயிற்சி நிலையம் இருந்த தீவு ஒன்றைக் கைப்பற்றியுள்ளதாக அறிவித்துள்ள இந்தோனேஷியப் படைகள் - தாம் பொதுமக்கள் மீது தாக்குதல்கள் நடத்துவதாக வெளியான செய்திகளையும் மறுத்துள்ளன.

‘அசே’ போராளிகள், வெளிநாட்டு தொண்டு நிறுவனங்களைத் தாக்குவதன் மூலம், சர்வதேச கவனத்தை ஈர்க்க முயற்சிக்கலாம் என்ற காரணத்தினாலேயே, வெளியூர் தொண்டு அமைப்புக்களை அங்கிருந்து வெளியேறுமாறு கோருகிறோம் என, இந்தோனேஷிய வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் தெரிவித்தார்.

‘அசே’ மாகாணத்திற்கான 7.5 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியையும் இந்தோனேஷிய அரசின் கோரிக்கையை அடுத்து உலகவங்கி நிறுத்தியுள்ளது.

## தீவிரவாதிகளுக்கு ஆதரவு அளிப்பதாக

# அமெரிக்கா அறிவிப்பு; ஈரான் அரசு மறுப்பு!

ஈரானில் சில அல் - கொய்டா அமைப்பு உறுப்பினர்களை, தாம் கைது செய்துள்ளதாக, ஈரான் அறிவித்துள்ளது. எனினும், அவர்கள் தீவிரவாத உறுப்பினர்களல்லர் எனவும் ஈரான் தெரிவித்துள்ளது.

முஸ்லிம் தீவிரவாதிகளுக்கு, ஈரான அடைக்கலம் அளிப்பதாக வெளியான அமெரிக்க எச்சரிக்கையைத் தொடர்ந்தே, ஈரானின் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. ஈரான் நாடே, ஆரம்பம் முதல் தீவிரவாதத்திற்கு எதிராகப் போராடி வருகின்றது என, ஈரானின் வெளியுறவு அமைச்சர் கபால் கராசி தெரிவித்துள்ளார்.

சர்ச்சை தந்த சவூதி குண்டுவெடிப்பு



ஆனால், சவூதி அரேபியாவில் அண்மையில் அமெரிக்கக் குடியிருப்பு மீது நடந்த தற்கொலைத் தாக்குதலுக்கும், ஈரானுக்கும் இடையே தொடர்பிருப்பதாக அமெரிக்கா கருத்து வெளியிட்டுவருவது குறிப்பிடத்தக்கது.



தாய்லாந்துப் பொலிஸார், போதைவஸ்துக் கடத்தலைத் தடுப்பதற்காக நாய்களைப் பயிற்றுவித்து அழைத்துவரும் காட்சி.

உலகவலம்

# எதியோப்பியாவில் மீண்டும் கடும் வரட்சி



கடந்த மூன்று வருடங்களாக மழை பொழியாததினால், எதியோப்பியாவில் 1985 இல் கண்ட மோசமான வறட்சி நிலையைவிட, தற்போது மிக மோசமான வறட்சி நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

1985 வறட்சியால் பாதிக்கப்பட்ட எதியோப்பிய மக்களுக்காக, அப்போது லண்டன் ‘வெம்பிளி’ அரங்கில் வரலாறு காணாத மாபெரும் இசை நிகழ்வு ஒன்று நடைபெற்றது. இதன்மூலம் சேகரிக்கப்பட்ட பெருமளவு நிதி - வறட்சியால் பாதிக்கப்பட்ட எதியோப்பியாவின் உணவுக் கொள்வனவுக்கென வழங்கப்பட்டது.

மீண்டும் இத்தகைய ஒரு இசை நிகழ்வை, எதியோப்பியாவிற்குள்ளேயே நடத்த, எதியோப்பிய அரசு முடிவு செய்துள்ளது. இந்த இசை நிகழ்வில் கலந்துகொள்ள - 1985 இல் இசை நிகழ்வை நடத்திய ஐரிஷ் பொப் பாடகர் பொப்கெல்டோப், எதியோப்பியாவுக்கு ஒரு வார சுற்றுப்பயணமாகச் சென்றுள்ளார். இவர் எதியோப்பியப் பிரதமரையும் சந்தித்துப் பேசியுள்ளார்.



பிலிப்பைன்ஸில் - பெருவெள்ளத்தால் மணிலா மாநகரின் பல பகுதிகள் பாதிப்படைந்துள்ளன. ஆனால், இச்சிறுவர்களின் கும்மாளம் மட்டும் குறையவில்லை.

# பிரான்ஸில் வேலை நிறுத்தம்; நாடு முழுமையாக ஸ்தம்பிதம்!

பிரான்ஸ் - விமான நிலையங்களின் கட்டுப்பாட்டுப் பிரிவு அலுவலக ஊழியர்களின் வேலை நிறுத்தத்தினால், நேற்று அங்கு விமான சேவைகள் பாதிக்கப்பட்டன.

இந்த வேலை நிறுத்தத்தினால், 80 வீத சேவைகள் நிறுத்தப்பட்டன. ஓய்வூதிய விவகாரம் தொடர்பாகவே இந்த வேலைநிறுத்தம் நடைபெற்றது.



வெறிச்சிட்ட விமானநிலையம்.

ஆசிரியர்கள், வைத்தியசாலைப பணியாளர்கள், தபாற்சேவையினர் மற்றும் தொலைத்தொடர்பு ஊழியர்களும் இந்த வேலை நிறுத்தத்தில் குதித்ததினால், பிரான்ஸ் முழுவதுமே ஒருவித ஸ்தம்பித நிலையை அடைந்தது. வீதிகள் மனிதச் சங்கிலிகளாலும், எரியும் பொருள்களாலும் தடை செய்யப்பட்டன. பாரிஸில் கழிவு அகற்றுபவர்கள் இரண்டு நாட்களாக பணிக்குச் செல்லாததால், நகரில் குப்பை கூழங்கள் நிறைந்துள்ளன.

‘வேலை நிறுத்தம் அவர்களது உரிமை. ஆனால், எம்மைப் பணயக் கைதிகளாக வைத்து இதை மேற்கொள்வதால், நாமே கஷ்டப்படுகின்றோம்’ என விமானப்பயணி ஒருவர் தெரிவித்தார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# இடைக்கால நிர்வாகத்துக்கு இப்போது சாத்தியமில்லை!

## பேனாட் குணதிலக கூறுகிறார்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளிடம் இடைக்கால நிர்வாகசபை ஒன்றை உடனடியாக வழங்குவது சாத்தியமில்லை எனவும், உரிய பிரதேசங்களில் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தேவையான செயற்திட்டமொன்றை முன்னெடுப்பதற்கே தற்போது அரசாங்கத்தின் கவனம் திரும்பியுள்ளதாகவும், அரசாங்கத்தின் சமாதான செயலகப் பணிப்பாளர் நாயகம் பேனாட் குணதிலக தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இடைக்கால நிர்வாகசபை தற்போதைக்குத் தேவையில்லையென தாய்லாந்துப் பேச்சுவார்த்தைகளின் போது, விடுதலைப் புலிகள் கூறியிருந்தனர்.

எனினும், வடக்கு - கிழக்குப் பிரதேசத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளைத் துரிதமாக செயற்படுத்துவதற்கு, இடைக்கால நிர்வாக சபையின் அவசியத்தை இப்போது விடுதலைப் புலிகள் சுட்டிக்காட்டியுள்ளனர் என்று, பேனாட் குணதிலக மேலும் தெரிவித்தார்.



''தேசத்தைப் பாதுகாப்பதற்கான தேசிய பிக்குகள் முன்னணி'' - விடுதலைப் புலிகள் ரோக்கியோ மாநாட்டுக்கு அழைக்கப்பட்டுள்ளமையை எதிர்த்து, கொழும்பிலுள்ள ஜப்பானியத் தூதரக அதிகாரிகளிடம் 30 ஆயிரம் சிங்கள மக்களின் கையெழுத்துக்களை ஒப்படைப்பதைப் படத்தில் காணலாம்.

## தென்பகுதி வெள்ள நிலைமையால்

# புலமைப்பரிசில் பரீட்சை டிசம்பருக்கு ஒத்திவைப்பு

இவ்வருடம் ஓகஸ்ட் மாதத்தில் நடைபெறவிருந்த தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையை, டிசம்பர் மாதத்துக்கு பிற்போடுவதற்கு கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தீர்மானித்துள்ளார்.

வெள்ளம் காரணமாகப் பாதிக்கப்பட்ட தென் பிரதேசங்களிலுள்ள பெற்றோர் - இப்பரீட்சையைப் பிற்போடு மாறு, கல்வி அமைச்சைக் கேட்டுக் கொண்டதற்கிணங்கவே, இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார். இதன்படி, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை, இந்த வருடம் மாத்திரம் டிசம்பர் மாதத்தில் நடைபெறு மெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மகாபொல நிதியில் வெட்டு

# ஜனாதிபதி தனது முடிவை பரிசீலிக்க அமைச்சர் கோரிக்கை

மகாபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நிதியத்திற்கு, அபிவிருத்தி லொத்தர் சபையினால் வழங்கப்படும் தொகையில் இருந்து - 50 வீதத்தை குறைப்பதென எடுக்கப்பட்ட தீர்மானத்தை, மீள்பரிசீலனை செய்யுமாறு, ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவிடம் அமைச்சர் ரவி கருணாநாயக்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாட்டின் எதிர்காலப் பொறுப்பை ஏற்கவுள்ள - மாணவ, மாணவிகளின கல்வி நடவடிக்கைகளைத் தொடர்வதற்கு அனுகூலமாக இருக்கும், ... திற்குக் கிடைக்கவேண்டிய நிதியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம் எனவும், ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு விசாகா வித்தியாலயத்தில் நேற்று இடம்பெற்ற மாநாட்டிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

உரிய வருவாயின்றிக் கஷ்ட நிலையை அனுபவித்துவரும் மாணவ, மாணவிகள் - உயர் கல்வியை மேற்கொள்வதற்கு, மகாபொல புலமைப்பரிசில் உதவியாக உள்ளதென்றும் அமைச்சர் மேலும் குறிப்...

### 'சுதந்திரப் பறவைகள்' வெளியீடு

விடுதலைப் புலிகளின் மகளிர் அமைப்பினரின் அதிகாரபூர்வ இதழான 'சுதந்திரப் பறவைகள்' இன்று வெளிவருகிறது. இதில் - நர்மதா எழுதிய 'கிராம மக்களுக்கு உரமேற்றிய தேசிய பெண்கள் மாநாடு' என்ற ஆக்கமும், தீபாவின் - 'சிகரங்களைத் தொட்டபின்பும் இன்று பெண்' என்ற கட்டுரை, பிரமிளாவின் 'அந்த ஏழு நாட்கள்', கதை விளம்பியின் - 'பேசாப்பொருள்', கார்முகிலின் - 'உழைக்கும் கரங்கள்', மலைமகளின் - 'இலக்கியம் படைத்த எரிமலை', தமிழ்க்கவியின் - 'தீச்சுடர்' போன்ற ஆக்கங்களுடன் மேலும் பல கட்டுரைகளும் பிரசுரமாகியுள்ளன.

### சிப்பாய் தற்கொலை

தனங்கிளப்பு இராணுவ முன்னரங்கப் பகுதியில், கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் கிரனைட்டை வெடிக்கவைத்து தற்கொலை செய்துகொண்டார்.

நேற்று அதிகாலை 2 மணிக்கு நடைபெற்ற இச்சம்பவத்தில், இ.எஸ. திசநாயக்கா என்பவரே தற்கொலை செய்தவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (13)

### அமைச்சர் மொறகொட ஜப்பானுக்கு!

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்பையடுத்து, அமைச்சர் மிலிந்த மொறகொட ஜப்பானுக்கு விஜயம் செய்துள்ளார்.

ஜப்பானில் நடைபெறவிருக்கும் உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் இலங்கை அரசு பங்குபற்றுவது தொடர்பாக முன்னேற்பாடுகளைக் கவனிப்பதற்காகவே, அமைச்சர் மிலிந்த மொறகொட நேற்று மாலை ஜப்பானுக்குப் புறப்பட்டுச் சென்றார்.

### குடிநீர் விநியோக நிறுத்தத்தால் அவதி

கொடிகாமம் சந்தைக்கான குடிநீர் விநியோகம், கடந்த இருவார காலமாக நிறுத்தப்பட்டிருப்பதால், வியாபாரிகளும், பொதுமக்களும் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர். இதனால், இந்தச் சந்தை ...

# அமைச்சர் சேனாரட்ண தென்மராட்சிக்கு விஜயம்

(நெல்லியடி)

காணியமைச்சர் ராஜித சேனாரட்ண மற்றும் இராணுவ உயரதிகாரிகள் நேற்று தென்மராட்சிப் பிரதேசத்திற்கு திடீர் விஜயம் செய்தனர்.

நேற்று 11 மணியளவில், உலங்குவானூர்தி மூலம் வந்திறங்கிய இவர்கள்- கரையோரப் பகுதிகளிலுள்ள இராணுவ நிலைகளுக்கு விஜயம் செய்தனர்.

பின்னர் - சாவகச்சேரி நகர் மற்றும் அங்குள்ள வைத்தியசாலை, தபால்நிலையக் கட்டடம் என்பவற்றையும் இவர்கள் நேரில் பார்வையிட்டனர். இப்பகுதியில் சுமார் இருபது நிமிடங்கள் மட்டுமே தங்கிநின்ற இவர்கள், சாவகச்சேரி பகுதிப் படையதிகாரிகளையும் சந்தித்துப் பேச்சு நடத்தியதாகவும் தெரியவருகிறது. (13)

# உதைபந்தாட்ட போட்டியில் நடுவர் தாக்கப்பட்டார்!

## துரையப்பா விளையாட்டரங்கில் ரகளை

(யாழ்ப்பாணம்)

யாழ். துரையப்பா விளையாட்டரங்கில், மத்தியஸ்தர் ஒருவர் பார்வையாளர்களால் தாக்கப்பட்டு, மயக்கமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ். சென். நீக்கிலஸ் விளையாட்டுக்கழகத்துக்கும், பாடுமீன் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையில் - நேற்றைய தினம் துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெற்ற உதைபந்தாட்ட நிகழ்வின்போது, வீரரொருவர் - எதிரணி வீரரைக் காலால் உதைத்தமையினால், அவருக்குத் தண்டனையாக நடுவரினால் சிவப்பு அட்டை காட்டப்பட்டு, வெளியே செல்ல அவர் பணிக்கப்பட்டார்.

இதனால், ஆத்திரமுற்ற சகவீரரொருவர், நடுவரைத் தாக்க முற்படுகையில் - நடுவர் பாதுகாப்புத் தேடி 'பவிலியன்' நோக்கி ஓடினார். அங்கு நின்ற மற்றுமோர் குழுவினர், நடுவரைக் கடுமையாகத் தாக்கியுள்ளனர்.

இத்தாக்குதலால் மயக்கமடைந்த நடுவர், சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தில் - ஜேக்கப் யூட்மன் (வயது 29) என்ற நடுவரே தாக்குதலுக்குள்ளாகி, யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவராவார். (சு,121)

# பேச்சில் புலிகள் பங்குபற்ற அவுஸ். அமைச்சர் அழைப்பு!

மீண்டும் சமாதானப் பேச்சு வார்த்தைகளில் பங்குபற்ற வேண்டுமென்று அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் அலெக்சாண்டர் டவுண், ... அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் - பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து உரையாடியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது

நாட்டின் எதிர்காலப் பொறுப்பை ஏற்கவுள்ள - மாணவ, மாணவிகளின கல்வி நடவடிக்கைகளைத் தொடர்வதற்கு அனுகூலமாக இருக்கும், மகாபொல புலமைப்பரிசில் நிதியத் மாணவ, மாணவிகள் - உயர் கல்வியை மேற்கொள்வதற்கு, மகாபொல புலமைப்பரிசில் உதவியாக உள்ளதென்றும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# இந்திய உற்பத்திகளுக்கு கொழும்பில் கண்காட்சி!

## சந்தை வாய்ப்புக்கு நடவடிக்கை

(கொழும்பு)

இந்திய உற்பத்திகளை இலங்கையில் அறிமுகப்படுத்தும் பொருட்டு, 'மேட் இன் இந்தியா' என்ற பாரிய கண்காட்சி ஒன்று, பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று ஆரம்பமானது.

இக்கண்காட்சி நாளைமறுதினம் வரை நடைபெறுகின்றது.

இந்தியாவிலுள்ள நூற்றுக்கு மேற்பட்ட நிறுவனங்கள் - இந்தக் கண்காட்சியில் பங்குபற்றுகின்றன. சிறிய உற்பத்திகள் தொடக்கம் பாரிய உற்பத்திகள்வரை கண்காட்சியில் வைக்கப்பட்டிருப்பதோடு, இந்தக் கண்காட்சியில் வைக்கப்பட்ட பொருட்களை இலங்கையிலுள்ளவர்களுக்கு கடனுதவி மூலம் வழங்குவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.




காலமாக நிறுத்தப்பட்டிருப்பதால், வியாபாரிகளும், பொதுமக்களும் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர். இதனால் , இந்தச் சந்தை வியாபாரிகள் அப்பகுதியிலுள்ள கோயில் கிணற்றுக்குச் சென்றே நீரைப் பெற்று வருகின்றனர். (34)

### சொல்ஹெய்ம்...

நோர்வேயின் விசேட தூதுவரிடம் புலிகள் கேட்டிருந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, தமக்கு வன்னி வருமாறு இன்னமும் புலிகளிடமிருந்து அழைப்பு வரவில்லை என எரிக் சொல்ஹெய்ம் நேற்று கொழும்பில் தெரிவித்தார்.

தொடர்ந்தும் கொழும்பில் தங்கியிருக்கும் எரிக் சொல்ஹெய்ம், நேற்று இரண்டாவது நாளாகவும் பிரதமரையும் அமைச்சர் பீரிஸையும் சந்தித்துப் பேச்சுகளை நடத்தினார். முன்னதாக, அவர் லண்டன் செல்ல நேற்றுமுன்தினம் திட்டமிட்டிருந்த போதிலும் - அது பின்னர் கைவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இடைக்கால நிர்வாகம் தொடர்பில் அரசு நெகிழ்வுப் போக்கைக் காட்டும் சாத்தியம் உண்டா என சொல்ஹெய்மைக் கேட்டபோது, அப்படியிருக்கலாம் எனத் தாம் நம்புவதாகவும் அவர் தெரிவித்தார். (01)

### ரோக்கியோ...

மாநாட்டுக்கு அழைக்கும் ஜப்பானின் செயலுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டதுடன், ஜப்பானியத் தூதரக அதிகாரிகளிடம், இது தொடர்பான கண்டன மகஜர், 30 ஆயிரம் பேரின் கையெழுத்துக்களுடன் கையளிக்கப்பட்டது.

மீண்டும் சமாதானப் பேச்சு வார்த்தைகளில் பங்குபற்ற வேண்டுமென்று அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் அலெக்சாண்டர் டவுண், விடுதலைப் புலிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அதுபோன்று, ரோக்கியோவில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் கலந்துகொள்ள வேண்டியது முக்கியமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

புலிகள், சமாதானப் பேச்சுவார்த்தைகளில் இருந்து தற்காலிகமாக விலகியுள்ளமை குறித்தும், ரோக்கியோ மாநாட்டில் கலந்துகொள்ளப் போவதில்லை என்ற அவர்களது அறிவிப்புப் பற்றியும் தான் கவலையடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு வருகை தந்துள்ள அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் - பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து உரையாடியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

### புலிகளுடன்...

தெரிவித்தார்.

இச்சந்திப்பில் ஜனாதிபதி மேலும் தெரிவிக்கையில் -

பலாலி தவிர்ந்த - ஏனைய உயர்பாதுகாப்பு வலயங்களில் மக்கள் மீள்குடியேறுவதை ஆட்சேபிக்க மாட்டேன். பிரபாகரனோ, விடுதலைப் புலிகளோ எனது தனிப்பட்ட எதிரிகளல்லர். அரசியல்தான் இப்படியான சூழ்நிலையை ஏற்படுத்திவிட்டது. பேச்சுக்கள் மூலமே இந்நாட்டுக்கு விடிவுகிட்டும். இது விடயமாக புலிகளுடன் மனம்விட்டுப் பேச விரும்புகிறேன். அவர்களும் அதற்கு முன்வரவேண்டும் என்றார்.

## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:-

| | கொள்வனவு விலை (ரு.ச.) | விற்பனை விலை (ரு.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.99 | 97.40 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 158.58 | 159.98 |
| 1 யூரோ | 114.18 | 115.53 |
| 1 சுவிஸ் பிராங் | 74.65 | 75.96 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 63.42 | 64.59 |
| 1 ஜப்பானிய யென் | 00.82 | 00.83 |
| 1 சவூதி றியால் | 25.93 | 25.93 |

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 28.05.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.